Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆடி -01 17-07-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 149


S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12150)

### பொதுக்கட்டமைப்புத்தொடர்பில்

# சிறிலங்கா உயர்நீதிமன்றத் தீர்ப்பு

# இராஜதந்திரிகள் மட்டத்தில் அதிர்ச்சி!

## சமாதான முயற்சிகளுக்கு பாரிய பின்னடைவென விசனம்

(கொழும்பு)

***பொதுக்கட்டமைப்பு தொடர்பில் சிறிலங்காவின் உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் வழங்கிய தீர்ப்பு சமாதான முயற்சிகளுக்குப் பாரிய பின்னடைவு என ஆய்வாளர்களும், இராஜதந்திரிகளும் கருதுவதாக ஏ.எவ்.பி செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.***

பொதுக்கட்டமைப்பு நிதியம், பிராந்தியக் குழுவின் தலைமையகம் கிளிநொச்சியில் செயற்படுவது மீளமைப் புத்திட்டங்களுக்கு பிரதேசக் குழுக்கள் ஒப்புதல் அளிப்பது மற்றும் நடைமுறைப்படுத்துவது ஆகியவற்றுக்கு சிறிலங்கா உயர் நீதிமன்றம் தடை விதித்திருப்பது தெரிந்ததே. இது தொடர்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று வாரங்களுக்கு முன் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டபோது ஏற்பட்ட நம்பிக்கையை உயர்நீதிமன்றத்தின்தீர்ப்பு மழுங்கடித்துவிட்டது என்று இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

இருதரப்பும் பேச்சுவார்த்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்ச்செல்வன்–கூட்டமைப்பு சந்திப்பு

## இன்றைய அரசியல் விவகாரங்கள் முக்கியமாக ஆராயப்படும்

(அலுவலக செய்தியாளர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமி ழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர். சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.

காலை 11.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச் சந்திப்பு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமிப் பாதிப்புக்களுக்கான பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்திட்டதன் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரசியல் துறைப்பொறுப்பாளர் அவர்களுக்கும் இடையில் நடைபெறும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்குறித்த தீர்ப்பு பிரதான கட்சிகளுக்கு விடுக்கப்பட்ட சவால்

### —— கூட்டமைப்பு பா.உ சம்பந்தன்

(திருகோணமலை)

பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக உயர் நீதிமன்றம் நிறைவேற்றி இருக்கும் தீர்ப்பு நாட்டின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ள சவால் ஆகும். ஒற்றையாட்சி அரசமைப்புத் தொடர வேண்டுமெனவும் வலியுறுத்திவரும் இவ் இனத்துவேச சக்திகளை ஊக்குவிப்பதாக இத்தீர்ப்பு அமைந்துள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுக்காலை தனது திருகோணமலை வாசலஸ்தலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்டகிளை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

சம்பந்தன் மேலும் பேசுகையில்; பொதுக்கட்டமைப்பு பற்றி உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தமிழ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலையில் நேற்று இராணுவச்சிப்பாய் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு வடக்கே வந்தாறுமூலையில் நேற்று மாலை சிறிலங்கா இராணுவச் சிப்பாயொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் கொம்மாந்துறை இராணுவ முகாமில் பணியாற்றும் லான்ஸ் கோப்ரல் சுஜித்குமார (வயது-25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வழமைபோல் மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறிப்பிட்ட இராணுவச் சிப்பாய்க்கு அருகாமையில் வந்த இளைஞரொருவர் கைத்துப்பாக்கியினால் இவரது நெஞ்சிலும், இடது (12ஆம்பக்கம் பார்க்க)

### கடற்படைத் துப்பாக்கிச் சூட்டில்

## கும்புறுப்பிட்டியில் பலியானவர் அடையாளம் காணப்பட்டார்

(திருகோணமலை)

கடந்த வியாழன் இரவு கும்புறுப்பிட்டியில் சிறிலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானவர் அதே இடத்தைச் சேர்ந்த முத்தையராசா (வயது-20) எனவும், காயமடைந்தவர் தங்கராஜா கேதீஸ்வரன் (வயது-25), எனவும் தெரியவந்துள்ளது.

அன்றையதினம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டு குடியிருப்புக்களிலிருந்து தப்பி ஓடி மெதடிஸ்த தேவாலயத்தில் தஞ்சம் புகுந்த இவர்களது உறவினர்கள் அவ்வேளையில் இவ்விருவரையும் காண வில்லையென பொது அமைப்புக்களின் தலைவர்களிடம் உடனடியாகவே முறைப்பாடு செய்தி ருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அதிகளவு படையினர் குவிப்பு!

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பின் செயற்பாடுகளை முடக்கும் வகையில் உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் வழங்கிய தீர்ப்பினை அடுத்து வடக்கு கிழக்கில் யுத்தம் ஒன்று ஏற்பட்டுவிடும் என்றஅச்சம் காரணமாகப் படையினர் அதிகளவில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

இதேவேளை திருகோணமலையில் மேலதிகமான சிறிலங்காப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அங்கு படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தோன்றியுள்ள முரண்பாடுகள் யுத்தம் ஒன்றாக மாறிவிடும் அபாயநிலை இருப்பதனால் இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் வீதித்தடைகள் அமைக்கப்பட்டு இராணுவம் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (32)

## தேசிய அடையாளஅட்டையைப் புலிகளிடம் கோருவது யுத்தநிறுத்த மீறலாகும்

### –கண்காணிப்புக்குழு அரச சமாதான செயலகத்திற்குக் கடிதம்

(அம்பாறை)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிப் போராளிகளிடம் விசேட அதிரடிப்படையினர் தேசிய அடையாள அட்டைகளைக் கேட்பது யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல் என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சிறிலங்கா சமாதான செயலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

நேற்று விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பனுக்கும், மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அரசியல் வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுள்ள தமது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இராணுவம் குவிப்பு

## மட்டு.அரசியல்துறை குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவம் அதிகளவில் குவிக்கப்பட்டு வருவதாக விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன் குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போது அமைதியாக உள்ள மட்டக்களப்பில் படையினர் மீண்டும் குவிக்கப்படுவது யுத்தம் ஒன்றை தம் மீது திணிக்கும் முயற்சியே என்று கூறியுள்ளார்.

படையினரின் இந்த நடவடிக்கை குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தயாமோகன் குறிப்பிட்டுள்ளார். (32)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழ,இல:-173/2005
தன்மை:-மணவிலக்கு

வழக்காளி

புஸ்பராசா இராஜகுமாரி,
போருட் ஒழுங்கை,
செல்வாநகர்.

எதிராளி

சுப்பிரமணியம் புஸ்பராசா,
வைத்தியசாலை அருகாமை,
அக்கராயன்குளம்,

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி வழக்கில் எதிராளியான சுப்பிரமணியம் புஸ்பராசா எனும் உமக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்க முயன்றும் தலைமறைவாகத் திரிவதால் இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது. இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் நீரோ அல்லது இவ்வழக்குத் தொடர்பில் அக்கறையுடைய எவருமோ மன்றில் தோன்றி இது தொடர்பான ஆட்சேபனையைத் தெரிவிக்க தவறும் பட்சத்தில் இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

'மன்றின் கட்டளைப்படி'

வரைபு:-
T.S வேலவர்
வழக்காளி சட்டத்தரணி
வேல்ட்விசன் அருகாமை
A.-9 வீதி
கிளிநொச்சி.

செ. மாணிக்கவாசகர்
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி. (6369)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1946 - 02 - 25

உதிர்வு 2003 - 07 - 18




உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்வோர் இறப்பிலும் வாழ்வார்

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் வழிகாட்டியாய் இருந்து
எம்மை வழிநடத்திய அன்புத்தெய்வத்தின்
இரண்டாம் ஆண்டு நினைவில்
கலந்திருக்கும் மனைவியும், பிள்ளைகளும்.

குடும்பத்தினர்,
புதியபுன்னை நீராவி.

(சி.12332)

## சாவு அறிவித்தல்

### வைத்திலிங்கம் - பசுபதிப்பிள்ளை

(வர்த்தகர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் - பசுபதிப்பிள்ளை 15.07.2005 இல் நெடுந்தீவில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னம்மா அவர்களின் மூத்த புதல்வரும், காலம் சென்ற அன்னலட்சுமியின் கணவரும், சந்திராதேவியின் (தவம் இந்தியா) தகப்பனாரும், மகாலிங்கத்தின் (லிங்கம் - லண்டன்) மாமனாரும், அபி, றஜி, துசி, மதுரா, அருள், அஸ்வரியா, அபிக்குமார் ஆகியோரின் பேரனும், காமாட்சி (மல்லாவி), கற்பகம் (லண்டன்) காலம் சென்ற பூரணம் (விநாயகபுரம்) மற்றும் செல்லம்மா (கனடா ), காலம் சென்றவர்களான தனுக்கோடி (வட்டக்கச்சி) கணபதிப்பிள்ளை (இராமநாதபுரம்) மற்றும் தில்லையம்பலம் (K.T.C) கிளிநொச்சி), இராசம்மா (கனடா), வள்ளிப்பிள்ளை (இராமநாதபுரம்), கோவிந்து (மல்லாவி), காலம் சென்ற தியாகராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.07.2005 நாளை திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு நெடுந்தீவு மேற்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

02 ஆம் வட்டாரம்,
மேற்கு- நெடுந்தீவு.

தகவல்:-
வை. தில்லையம்பலம்
தம்பி
(K.T.C கிளிநொச்சி)

(சி.12336)

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

சேவியர் கடைச் சந்திக்கு அருகாமையில் உள்ள இலக்கம் 158, ஆனந்தநகரில் 1/2 ஏக்கர் காணியும், 10ஆம் பண்ணையில் உள்ள 104 இலக்கத்திற்குரிய 2ஏக்கர் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு: எஸ்.குகன். இல-104, 10ஆம் பண்ணை, கனகபுரம். (6365)

## வடமராட்சி கிழக்கில் 'ஒக்ஸ்பாம்' உதவி

(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சி கிழக்கில் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் வைத்து நேற்று முன்தினம் "ஒக்ஸ்பாம்" நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்டு தமது தொழில்களை மீளவும் செய்ய முடியாமல் உள்ளவர்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. 136 பேருக்கு முதற்கட்டமாக 10000 ரூபா தொடக்கம் 25000 ரூபா வரையிலான நிதி வழங்கப்பட்டுள் ளது.

மேற்படி நிகழ்விற்கு "ஒக்ஸ்பாம்" நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் செந்தில்குமார் சிறப்புரையினை வழங்கினார். அவர் தனது சிறப்புரையில; எதிர்வரும் புதன்கிழமை மீண்டும எட்டு இலட்சம் ரூபா நிதியினை வழங்க உள்ளதாகவும் இந்நிதி மீண்டும் தொழில்களை ஆரம்பிப்பதற்காகவே வழங்கியுள்ளதாகவும், அடுத்த கட்டமாக வேறு சில திட்டங்களினூடாக இப்பகுதி மக்களுக்கு உதவி செய்ய இருப்பதாகவும், இதேபோன்று சுனாமியால் பாதிக்கப்பட்ட இப் பகுதி மக்கள் அனைவருக்கும் உதவி செய்ய நாம் தயாராக இருப்பதாகவும், அவர் தனது உரையில் உறுதிபடக் கூறினார். (தீ)

## பரந்தன் குமரபுரம் ஸ்ரீ முருகன் ஆலய சங்காபிஷேசம்

கடந்த 24.06.2005 இல் குமரபுரம் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்று, தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று, இன்று ஞாயிற்றுக்கிழமை எம்பெருமான் முருகனுக்கு சங்காபிஷேகமும், பகல்அபிஷேக ஆராதனையும் மகேஸ்வர பூசையும் காவடி, பாற்செம்பு என்பனவும் இடம்பெற உள்ளது. முருகன் அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வந்து எம் பெருமானின் ஸ்ரசித்திகளை பெற்று ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்

(6370)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சபாரட்ணம் கனகரட்ணம்



30 வருடங்களுக்கு மேலாக கிளி/ வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் சாரதியாகக் கடமையாற்றியுள்ளார். அவரது சேவையைப் பாராட்டி மாவட்ட வைத்திய அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் நீண்ட காலம் வாழ்க வென வாழ்த்துகின்றோம்.

(சி.12335)

## ஏலவிற்பனை

எப்போது.......2005.07.24

எவ்வகைப்பொருள்......

- இலத்திரனியற் பொருள்கள்
- மின்னியற் பொருள்கள்
- ஊர்தி உதிரிப்பாகங்கள்
- புடைவை வகை
- அழகுசாதனப்பொருள்கள்

எங்கே.....

நாளை எதிர்பாருங்கள்.

(சி.12334)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

### நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

### கேள்வி அறிவித்தல் - 2005

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் பின்வரும் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலங்களைத் தற்காலிக குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கச்சான் கடைகள்
02. மணிக்காப்புக் கடைகள்
03. இனிப்புக் கடைகள்
04. இதர கடைகள்
05. ஐஸ்கிறீம் கடைகள்
06. ஐஸ்கிறீம் வாகன நிலையங்கள்
07. துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம்
08. விளம்பர முகவர் நிலையங்கள்

இதற்கான கேள்வி விண்ணப்பப்படிவங்கள் 18.07.2005 தொடக்கம் 01.08.2005 நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

கேள்வி ஏற்றுக் கொள்ளல் 01.08.2005 பிற்பகல் 2.30 மணி வரை

கேள்வி திறத்தல் 01.08.2005 பிற்பகல் 3.00 மணி

மீளளிக்கமுடியாத கேள்வி விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 300. (வற் நீங்கலாக).

மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணமாக ஐஸ்கிறீம் கடைகள் ரூபா 10000.00 ஏனைய கடைகள் ரூபா 1000.00

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் வியாபாரத்தின் தன்மை குறிப்பிடப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம். என்னும் முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில்/ நானாவித இறைவரிப் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும்.

கேள்விகள் திறக்கப்படும்போது உரிமையாளர் அல்லது பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்கலாம். மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்வதுடன், கடைகளுக்கான வரைபடத்தையும் நேரில் பார்வையிடலாம்.

குறிப்பு:- மேற்படி சபையால் வழங்கப்படும் தற்காலிக கடைகளைத் தவிர எதிர்வரும் 09.08.2005 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்து சபையின் அனுமதி பெற்றிராத எந்தத்தற்காலிக வியாபாரமும் திருவிழாக் காலத்தில் நடாத்த அனுமதிக்கப்படாது என்பதையும் அறியத் தருகின்றேன்.

கலாநிதி. க குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

(சி.12365)

# தாய்வானுக்காக அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா மீது அணுவாயுதத் தாக்குதல் நடத்துவோம்

## -சீன இராணுவத்தளபதி மிரட்டல்

(பீஜிங்)

**தாய்வானுக்காக அமெரிக்கா எங்கள் மீது தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா மீது அணுவாயுதத் தாக்குதல் நடத்துவோம் என்று சீன இராணுவத்தளபதி எச்சரித்துள்ளார்.**

சீனாவில் கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சியைக் கைப்பற்றியதும் முன்னைய ஆட்சியாளர்கள் அங்கிருந்து தப்பியோடி தாய்வானில் குடியேறி அங்கு புதிய ஆட்சியை ஏற்படுத்தினர். அன்றிலிருந்து தாய்வான் தனி நாடாக இருந்து வருகிறது. இதைத் தனி நாடாக ஏற்க சீனா மறுக்கிறது.

தாய்வானுக்கு ஆதரவாக இருந்த அமெரிக்கா சீனாவுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்ட பின் ஆதரவுக்கரத்தை மடக்கிக் கொண்டது. ஆனால் அதை முழுமையாக மடக்காமல் அடிக்கடி மடக்கி நீட்டி வருகிறது. அமெரிக்காவின் இந்த நிலை சீனாவுக்கு எரிச் சலை ஏற்படுத்தி வருகிறது. எங்களுடன் இணைந்து விட வேண்டும் என்று அது தாய்வானை மிரட்டி வருகிறது. இணையாவிட்டால் தாய்வான் மீது போர்தொடுப்போம் என்றும் அது அச்சுறுத்தி வருகிறது. அமெரிக்கா ஆதரவு காரணமாக தாய்வான் சீனாவின் மிரட்டலுக்குப் பணிய மறுக்கிறது.

இந்த நிலையில் சீன இராணுவ மூத்த தளபதி ஷு சென்கு வெளிநாட்டு நிருபர்களுக்குப் பேட்டி அளித்தபோது கூறியதாவது;

தாய்வான் பிரச்சினைக்காக எங்கள் மீது அமெரிக்கத் தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா மீது அணுவாயுதத் தாக்குதல் நடத்துவோம் என்ற கருத்தைத்தான் நான் உங்களிடம் சொல்கிறேன். அமெரிக்காவுடன் மோதல் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மோதல் ஏற்பட்டால் சீனாவுக்கு அணுவாயுதத்தைக் கையில் எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அமெரிக்காவுடன் மரபு வழி யுத்தம் நடத்தும் சக்தி சீனாவுக்குக் கிடையாது. அமெரிக்கா இந்த விவகாரத்தில் தலையிட்டால் அதற்குத் தக்க பதிலடி கொடுக்க நாங்கள் தீர்மானித்து இருக்கிறோம்.

ஷியானுக்கு கிழக்கே உள்ள அனைத்து நகரங்களும் அழிக்கப்படலாம். அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேபோல அமெரிக்காவும் அதன் நூற்றுக்கணக்கான நகரங்களை இழக்கத்தயாராக இருக்கவேண்டும் இவ்வாறு அந்தத் தளபதி கூறினார்.

இது பற்றி சீன வெளிநாட்டு செய்தித்தொடர்பாளர் ஒருவர் கூறுகையில்; அந்தத் தளபதி பேட்டி அளித்தது அரசின் கருத்து அல்ல. அரசு சார்பில் அவர் பேசவில்லை. இது குறித்து வெளிநாட்டு அமைச்சரகம் பரிசீலிக்கும் என்று கூறினார். இராணுவ அமைச்சரகம் இதுபற்றித் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டது. சீனாவின் அணுவாயுதத் தாக்குதல் மிரட்டல் குறித்து தாய்வான் இராணுவ அமைச்சரகம் நேரடியாக விமர்சிக்க மறுத்துவிட்டது.

"அணுவாயுதத்தைப் பயன்படுத்துவது சர்வ தேச நாடுகளின் கண்டனத்துக்குரியது" என்று மட்டும் கூறியுள்ளது.



பாக்தாத்தில் விமானக்குண்டு வீச்சில் தனது காலையிழந்த ஐந்து வயதுச் சிறுமி தனது தாயுடன் இராணுவ நிலை ஒன்றுக்கு முன்னால் நடந்துசெல்கிறாள். (ஆப்கானிஸ்தான், அங்கோலா,, கம்போடியா ஆகிய நாடுகளுக்கு அடுத்த படியாக போரில் அழிவுகளைச் சந்தித்த மக்கள் தொகை ஈராக்கில் உள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.



தாய்வானில் உள்ள அமெரிக்கப் படையினரை விரட்ட அணுவாயுதத்தைப் பிரயோகிக்கலாம் என சீனா கூறியுள்ள நிலையில் சீன மக்கள் விடுதலை இராணுவ வீரர்கள் அணி வகுத்து நிற்கின்றனர்.

# லண்டன் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய எகிப்து தீவிரவாதி கெய்ரோவில் கைது

(வோஷிங்டன்)

லண்டன் குண்டு வெடிப்பில் தொடர்புடைய எகிப்து தீவிரவாதி கெய்ரோவில் கைது செய்யப்பட்டார். அவரிடம் தீவிர விசாரணை நடந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் கடந்த ஏழாம் திகதி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதன்போது தற்கொலைப் படையைச் சேர்ந்த நான்கு பேர் பலியாகினர். அவர்களுக்கு தாக்குதல் திட்டம் தீட்டிக் கொடுத்த தீவிரவாதி எகிப்தைச் சேர்ந்த இரசாயனத்துறை மாணவர் என்று கண்டுபிடிக்கப் பட்டது. அவரைக் கண்டுபிடித்த பிரிட்டன் புலனாய்வுத் துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர். அவர் பெயர் மேக்டி நஷார் (வயது-33) என்று தெரியவந்துள்ளது. இவர் தான் தீவிரவாதிகளுக்குத் தாக்குதல் நடத்த வியூகம் வகுத்துக் கொடுத்ததாக சந்தேகிக்கப்படுகிறது. லண்டனில் குண்டு வெடிப்பு நடப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் பிரிட்டனை விட்டு வெளியேறி விட்டதாகச் சந்தேகிக்கப்படு கிறது.

இந்நிலையில் அமெரிக்கப் புலனாய்வு ஏஜென்சி எப்.பி.ஐ. உட்பட பல்வேறு அமைப்புக்களின் ஆதாரங்களைச் சுட்டிக் காட்டி ஏ.பி.சி நியூஸ் நேற்று முன்தினம் வெளியிட்ட செய்தியில்

லண்டன் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட தீவிரவாதியைக் கண்டுபிடிக்க சர்வதேச அளவில் தேடுதல் வேட்டை நடக்கிறது. அவரை கெய்ரோவில் பொலிசார் கைதுசெய்து விட்டனர். அவரிடம் தற்போது தீவிர விசாரணை நடந்து வருகிறது. இத தகவலை எகிப்து அதிகாரிகள் எங்களுக்கு உறுதிப்படுத்தினர்.

லண்டன் லீட்ஸ் பகுதியில் வெடிகுண்டு தொழிற்சாலை அமைக்க தீவிரவாதிகளுக்கு உதவி செய்தது. இந்த மேக்டி நஷார் என்பவரே கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு ஏ.பி.சி நியூஸ் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# ஜப்பான் கடலில் கப்பல்கள் மோதல் ஆறு பேர் உயிரிழப்பு;ஐவர் தப்பினர்

(டோக்கியோ)

ஜப்பான் கடலில் மிகிசசி முனை அருகே 697 தொன் எடை உள்ளகி யோகுயோமாரு என்ற எண்ணைக்கப்பலும் 499 தொன் எடைகொண்ட சரக்குக் கப்பலும் மோதிக்கொண்டதில் ஆறு மாலுமிகள் உயிரிழந்துள்ளனர். அதிகாலை நான்குமணிக்கு இந்த விபத்து நடந்துள்ளது. பனிப்பொழிவு காரணமாக இந்த விபத்து நடந்தது. இதில் எண்ணெய்க்கப்பல் வெடித்தது. அதில இருந்த ஆறு பயணிகளும் பலியானர்கள் சரக்குக் கப்பல் சிப்பந்திகள் ஐந்து பேரும் உயிர்தப்பினர்.

# முஸ்லிம் இளைஞர்களின் தீவிரவாதப் போக்கை மாற்றுவது என்பது கடினமானதொன்று

## -பிரிட்டன் முஸ்லிம் தலைவர்கள்

(லண்டன்)

"முஸ்லிம் இளைஞர்கள் தற்கொலைப் படையினராக மாறுவதையும், அவர்களிடம் இருந்து தீவிரவாத எண்ணத்தைப் போக்குவதும் கடினம்," என்று பிரிட்டன் வாழ் முஸ்லிம் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பிரிட்டன் முஸ்லிம் சபை உட்பட பல்வேறு முஸ்லிம் அமைப்பைச்சேர்ந்த தலைவர்கள் கூறியதாவது: முஸ்லிம் இளைஞர்களின் மனதிலிருந்து தீவிரவாத எண்ணத்தைப் போக்க நிறையச் செய்ய வேண்டியுள்ளது. ஆனால், இணையத்தளம் தொலைக்காட்சி எல்லாம் அவர்களை மேலும் மேலும் ஆவேசப்படுத்துகின்றன. ஈராக் மற்றும் மத்திய கிழக்குப்பகுதி, குவாண்டனமோ சிறை போன்ற இடங்களில் எல்லாம் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவதையும், சித்திரைவதை செய்யப்படுவதையும், தொலைக்கட்சியில் பார்க்கும் முஸ்லிம் இளைஞர்கள் தீவிரவாதப் பாதையைத்தேர்ந்தெடுக்கின்றனர்.

குறிப்பாக, சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் வாழும் முஸ்லிம் இளைஞர்கள் பலா் தீவிரவாத எண்ணத்துக்கு எளிதாகப் பலியாகிவிடுகின்றனர். இவ்வாறு முஸ்லிம் அமைப்புத் தலைவர்கள் கூறியுள்ளனர்.



லண்டன் குண்டுவெடிப்பில் பலியானவர்களுக்கு அங்குள்ள ரஸல் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கானோர் கூடி அஞ்சலி செலுத்தினார்கள்.



லண்டன் குண்டுவெடிப்புத் தொடர்பாக லீட்ஸ் நகர வீடுதியொன்றைத் சோதனையிடும் பொலிசார். அருகில் சட்டவாளர் காணப்படுகிறார்.

# தாய்வானில் அவசரகால நிலை

தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளதால், தாய்லாந்தில் மூன்று மாகாணங்களில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் முஸ்லிம்கள்அதிகம் வசிக்கும் மூன்று மகாணங்களில் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 800 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளை ஒடுக்க இம்மாகாணங்களில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான அதிகாரத்தைப் பிரதமர் தக்ஷின் சின்வத்ராவுக்கு அமைச்சரவை நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

இதன் மூலம், இம்மாகாணங்களில் சந்தேகத்துக்குரிய நபர்களின் தொலைபேசியை ஒட்டுக்கேட்கவும், பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி செய்திகளைத்தணிக்கை செய்யவும், குற்றச்சாட்டுக்களைக் கூறாமல் யாரை வேண்டுமானாலும் கைது செய்யவும் பாதுகாப்புப்படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# டிஸ்கவரி விண்கலத்தில் கோளாறு சீர்செய்ய விஞ்ஞானிகள் முயற்சி

டிஸ்கவரி விண்வெளி ஓடத்தின் எரிபொருள் உணர் கருவியில் ஏற்பட்ட கோளாறை சீர்செய்ய 'நாசா' விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

ஏழு விண்வெளி வீரர்களுடன் "டிஸ்கவரி" விண்வெளி ஓடம் கடந்த புதனன்று ஏவப்பட இருந்தது. அதன் எரிபொருள் உணர் கருவியில் ஏற்பட்ட திடீர் கோளாறால் 'டிஸ்கவரியை' ஏவும் திட்டம் கைவிடப்பட்டது. அமெரிக்கா புளோரிடா மாகாணத்திலுள்ள கென்னடி விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் ஏவு தளத்தில் இருந்து. விண்வெளி ஓடம் இன்னும் நீக்கப்படவில்லை. அதே இடத்தில் கோளாறை சீர்செய்யும் முயற்சியில் நாசா விஞ்ஞானிகள் முயற்சி மேற்கொண்டபோதும் பயன் கிடைக்கவில்லை. கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படும் 200 அம்சங்களை விஞ்ஞானிகள் பரிசோதித்தனர். ஆனால் கோளாறுக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கோளாறு சீர் செய்யப்பட்டால் டிஸ்கவரியை இன்று ஏவலாம் என்ற திட்டத்திலும், நாசா உள்ளது. அதன் காரணமாகவே ஏவு தளத்தில் இருந்து அதை நீக்காமல் வைத்துள்ளது. டிஸ்கவரி விண்வெளி ஓட திட்டத்தின் துணை நிர்வாகியான வானே ஹேல் கூறுகையில் டிஸ்கவரியை ஞாயிற்றுக்கிழமை ஏவுவது நம்பகமானதும் அல்ல என்றார்.

# கத்தோலிக்க மதகுரு துப்பாக்கிச் சூட்டிற்குப் பலி

(நைரோபி)

கென்யா தலைநகர் நைரோபியில் கத்தோலிக்க பேராயர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நைரோபி அருகே இசியோலா பகுதியைச் சேர்ந்த கத்தோலிக்க பேராயர் லுயிசிலோ காட்டி வழக்கமாக காலையில் நடைபயிற்சியில் சென்று கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொன்று விட்டுத் தப்பியோடியுள்ளார். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மிகமோசமாக சேதமடைந்த நிலையில் அக்கராயன் பொதுச்சந்தைக் கொட்டகை

(அலுவலக செய்தியாளர்)

அக்கராயன் முறிகண்டி வீதியில் அக்கராயன் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள பொதுச்சந்தை நீண்ட காலமாகத் திருத்தப்படாத நிலையில் தாம் பெரும் சிரமங் களை எதிர்கொள்வதாக வியாபாரிகள் கவலை தெரி



வித்துள்ளனர்.

அக்கராயன் பொதுச்சந்தை கொட்டகை நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் மிகவும் மோசமாக சேத மடைந்துள்ளது. சந்தைக்கான சுற்றுவேலிகள் எவையும் அடைக்கப்படவில்லை.அதனால் கால்நடைகளின் தொல்லை அதிகமாகியிருக்கிறது. இதனைவிட சந்தைக் கொட்டகைக்கான கூரைகள் வேயப்படவில்லை. கொட் டகையின் கூரையில் பெரும் ஓட்டைகள் காணப் படுகின்றன.

இந்த நிலை பற்றி வியாபாரிகளிடம் கேட்டபோது,

இந்தக்கொட்டகையை திருத்தித்தரும்படி நாங்கள் நான்கு மாதங்களுக்கு முன்னர் இருந்தே கோரிவருகிறோம். கூரையில் காணப்படுகின்ற பெரிய இடை வெளிகளினால் வெய்யில் வருகிறது. மழைக்காலம் நெருங்கிவிட்டது. மழைவந்தால் நாம் என்ன செய்வது?

நாங்கள் இந்த வியாபாரத்தை நம்பித்தான் இருக்கிறோம். திருத்தித் தருமாறு கேட்டுக் களைத்துப் போனோம். முன்னர் பெரியசந்தையாக இருந்தது. இப்போது சிறிய கிராமச்சந்தைபோல இது வந்துவிட்டது. இந்த சிறியகொட்டகையைச் திருத்துவதற்கு ஏன் பின்னடிக் கிறார்கள்? எங்கள் நிலை புரிந்து இத னைத்திருத்தித் தரவேண்டும் என் றார்கள். (லோ,தீ)

# தரம்5 புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெறும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சைக்கான வழிகாட்டல் வகுப்பு எதிர்வரும் 31 ஆம் திகதி கிளி மத்திய கல்லூரியிலும், கிளி . பரந்தன் இந்து ம.வி. இலும் முன்னணி ஆசிரியர்களால் நடாத்தப்படவுள்ளது. இவ்வகுப்புக்களில் தரம் 5 மாணவர்களைப் பங்கு பற்றி பயனடையுமாறு அதிபர்களிடம் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள் ளார்.இவ்வழிகாட்டல் வகுப்பு காலை 8.30 தொடக்கம் 5.00 மணிவரை நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (34)

# "வற்றாத நீர் ஊற்று" மக்களின் பாவனைக்கு

மன்னார் வங்காலைக் கிராமத்தில் 5ஆம் வட்டாரச் சந்தியில் உள்ள வற்றாத தண்ணீர் ஊற்று குழாய் சமூக அபிவிருத்தி திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு மக்கள் பாவனைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த 15 வருடங்களாக இந்நீர் வற்றாது தடையின்றி பாய்ந்து வந்துள்ளது. இவ்விடயம் மன்னார் அரச அதிபரின் கவனத்தில் கொள்ளப்பட்டதையடுத்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நீர்த்தொட்டி ஒன்று அமைத்து மக்கள் பாவனைக்கு பயன்படுத்தபட்டு வருகின்றது. (18)

# பாரிய ஆளணி பற்றாக்குறையால் முல்லை.மாவட்ட வைத்தியசாலைகளில் நெருக்கடி!

## - பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் கவலை

(அலுவலக செய்தியாளர்)

**முல்லை. மாவட்ட வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பற்றாக் குறையால் பெரும் நெருக்கடி எதிர்நோக்கப்படுகிறது. ஆனால் முல்லை மாவட்டத்தை சேர்ந்த முப்பதுக்கும் அதிகமான வைத்தியர்கள் வெளி மாவட்டங்களில் பணிபுரிந்து வருகின்றனர் என்று முல்லை மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜெயகுலராஜா தெரிவித்தார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

பாரிய ஆளணி பற்றாக்குறையு டனேயே முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சுகாதார செயற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

முல்லை மாவட்டத்தில் ஒன்பது மருத்து வமனைகள் இயங்கி வருகின்றன. இவற்றோடு இரண்டு சுகாதார வைத் திய அதிகாரிகள் பணிமனைகளும் உள்ளன. இவற்றுக்கான ஆளணிகள் மிகவும் குறைவாகவே உள்ளன. 15 வைத்தியர்கள் தேவையாக உள்ள னர். ஆனால் மூன்று வைத்தியர்களே இங்கு கடமையாற்றுகின்றனர். இம் மூவரிலும் ஒருவர் தற்காலிக நிய மனம் பெற்றே இங்கு சேவையாற்று கின்றார். அத்தோடு மல்லாவியிலும் தற்காலிக வைத்தியர் ஒருவரே சேவையாற்றி வருகின்றார். இம் மாவட்டத்திலிருந்து 30 இற்கும் மேற் பட்ட வைத்தியர்கள் தமது வசதி களைக் கருதி வெளிமாவட்டங்களில் பணியாற்றி வருகின்றார்கள். இவர் களேனும்சேவை நோக்கைக்கருத்தில் கொண்டு இம்மாவட்டத்தில் பணிபுரிய முன்வரவேண்டும்.

இவற்றோடு சுகாதார மருத்துவ மாதுக்களின் பணிக்கும் பெரும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது. இம்மாவட்டத்தில் 17 மருத்துவ மாதுக்கள் தேவைப்படுகின்றனர்.

ஆனால் ஆறு பேர் மட்டுமே உள்ளனர். இவை தொடர்பாக அரசாங்கத் துறைசார் திணைக்களங் களுக்கு பலமுறை தெரியப்படுத்தி யும் சாதகமான செயற்பாடுகள் எது வும் நடைபெறவில்லை.

தற்போதுள்ள நிலையில் சுகாதா ரத் தொண்டர்களே முதுகெலும்பாக நின்று சேவை செய்து வருகின்றனர். இவர்கள் இல்லாத நிலையில் எந்தவித சுகாதார செயற்பாடுகளை யும் மேற்கொள்ள முடியாத நிலைக்கு இம்மாவட்டம் தள்ளப்படும். இவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குமாறு உரியவர்களிடம் பல முறை கேட்டும் அதற்கான நடவடிக் கைகளையும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் இத் தொண்டர் களுக்கு கொடுப்பனவுகளை வழங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இடைநிறுத்தாமல் அவற்றை தொடர்ந் தும் வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (ச)

# மட்டக்களப்பில் படையினரின் கெடுபிடிகள் அதிகரிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதி களவிலான சிறிலங்காப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். கடந்த சில நாட்களாக இவர்களது சோதனைக் கெடுபிடிகளும் அதிகரிக்கப்பட்டுள் ளன. மட்டக்களப்பு நகருக்கு நுழை வாயில்களாகக் கருதப்படும் கல் லடிப்பாலம் மற்றும் புதுப்பாலம், கோட்டமுனைப்பாலம் ஆகிய இடங் களில் சோதனை நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. அத்துடன் உந்துருளிகளில் செல்லும் பொது மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டு கடுமை யாக சோதனைக்குட்படுவது குறித்தும் மக்கள் கடும் பீதி அடைந்துள்ளனர்.

# புத்தர்சிலை, இராணுவக்குவிப்பை அகற்றும்வரை திருகோணமலையில் அமைதி திரும்பாது

## - தமிழ் மக்கள் பேரவை அறிவுறுத்து

சட்டவிரோத புத்தர்சிலையும், குவிக்கப்பட்டுள்ள இராணுவமும் அகற்றப்படும்வரை திருகோணமலை யில் அமைதி திரும்பாது என்று திரு கோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை சனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மற்றும் வெளிநாட்டுத் தூதர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரி வித்துள்ளது.

"திருகோணமலை நகரம் யுத்த காலத்தில் இருந்ததைவிட மிகவும் பதற்றமான சூழ்நிலையில் தற்போது காணப்படுகிறது. மூவின மக்களின தும் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு வீதியில் இறங்குவதற்குக் கூட பயப் படுகின்ற நிலை உருவாகியுள்ளது. இதற்கான முழுப்பொறுப்பையும் சிறி லங்கா அரசும், பாதுகாப்புப் படைக ளுமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இரவோடிரவாக நிறுவப்பட்ட புத் தர்சிலையே பிரச்சினைக்கு மூலகார ணமாகும்.இவ்விவகாரத்தில் அரசு பலவித உறுதிமொழிகளை வழங்கி யது. ஆனால் உருப்படியான நட வடிக்கைகளை எடுக்கவில்லை. திரு மலை நகரம் இராணுவ மயமாக்கப் பட்டுள்ளது. இதன் மத்தியில் செல்வ நாயகபுரத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்பணிமனை தாக்கப்பட்டு போராளிகளும், பொதுமக்களுமாக நான்குபேர் கொல்லப்பட்டனர்" என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

" திருமலை நகரம் யுத்தகளமாக மாறியுள்ளது. இதன் நோக்கம், சமா தானத்தை இல்லாமற் செய்வதா என்பதை அரசு உடன் தெரிவிக்க வேண்டும். யாருக்குப் பாதுகாப்பு வழங்கப் படையினர் நிறுத்தப்பட்டுள் ளனர் என்பதை அரசு தெரிவிக்க வேண்டும். பாதுகாப்பு நடவடிக்கை களை மக்களின் இயல்பு வாழ்க் கைக்குக் குந்தகமில்லாத முறையில் ஒழுங்கு செய்யுங்கள். திருமலையை இராணுவமயப்படுத்தி வைத்திருப்பது பற்றி அரசாங்கம் அறிக்கையை வெளியிடவேண்டும். எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இப்பிரச்சி னையில் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்" என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அரச படைகள் மேற்கொண்ட அப்பட்டமான படுகொலை மூலம் விடுதலைப் புலிகளை அரசியல்பணி யைச் செய்யவிடாது தடுத்துள்ளீர்கள். தமிழ் மக்களால் இதனை ஏற்றுக் கொள்ளமுடியாது. மூன்றரை ஆண்டு கள் சமாதானம் என்ற கனவுடன் வாழ்ந்து வந்த மக்கள் இன்று மனக்கிலேசம் அடைந்துள்ளனர்.

தமிழ் மக்கள் மீது மீண்டும் யுத்தம் திணிக்கப்படுகிறது. இது ஆபத்தை உருவாக்கும். போரைத் திணிக்க வேண்டாம். திணிக்கப்பட்டால் தேசத் தின் விடுதலைக்காக அதனை நாம் ஏற்றுக்கொள்வோம் என்றும் திரு கோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை தனது அறிக்கையில் தெரி வித்துள்ளது. (25)

# மன்னார் பகுதியில் மின்சாரத்தடை

(மன்னார்)

மன்னாரில் தொடர்ந்து மூன்று நாட்களுக்கும் மேலாக மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

இரவு 7.00 மணியிலிருந்து நள் ளிரவு 1.00 மணிவரை மட்டுமே மின் சாரம் கிடைக்கப் பெறுகின்றது. இதனால் தொழில் நிறுவனங்களின் வேலைகள் பல தடைப்படுவதாக. பாவனையாளர்கள் கவலை தெரி வித்துள்ளனர்.

இதேவேளை அண்மையில் மின் சாரப்பாவனையாளர்கள் சங்கம் இது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய் தமை குறிப்பிடத்தக்கதாகும். (18)

# சேதுசமுத்திரத்திட்டத்தை எதிர்த்து மன்னாரில் செவ்வாய் ஆர்ப்பாட்டப் பேரணி

(மன்னார்)

சேதுசமுத்திரத் திட்டத்தை எதிர்த்து மன்னாரில் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நடத்தப்படவுள்ளது.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை சகல கடற்றொழிலாளர் சங்கங்களும் இணைந்து நடத்தவுள்ளன. சேதுசமுத்திரத் திட்டத்தால் மன்னாரில் ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் பாதிப்படைவார்கள் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இதேவேளை நேற்றுமுன்தினம் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசியக் கல்லூரியில் சுற்றாடல் சுமுகத் தீவு மத்திய நிலையத்தினரால் சேது சமுத்திரத் திட்டத்தால் மன்னாரில் ஏற்படவுள்ள பாதிப்புக்கள் [illegible] உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கருத்தரங்கொன்றும் நடத்தப் [illegible] குறிப்பிடத்தக்கதாகும். (18)

# திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் மரவளர்ப்பு பரிசளிப்பு விழா


(திருமுறிகண்டி)

கடந்த ஆண்டு வனவளர்ப்புப் பிரிவினரால் கொடுக் கப்பட்ட 38 மரக்கன்றுகள் வளர்ந்து நல்ல நிலையில் இருப்பதைப் பாராட்டிதிருமுறிகண்டி இந்து வித்தியாலயத் தில் வனவளப் பிரிவினரின் ஏற்பாட்டில் 70 மாணவர்க ளுக்கு பாடசாலை உபகரணப்பைகள் பரிசுப்பொருட்க ளாக வழங்கப்பட்டது.

இந் நிகழ்வு அதிபர் ஆ.சூசைநாதர் தலைமையில் இடம் பெற்றது. இதில் அமெரிக்க, டென்மார்க் நாடுகளில் இருந்து வருகை தந்திருந்த விரிவுரையாளர்களும் கலந்து சிறப் பித்தனர்.வனவளப் பிரிவுப்பொறுப்பாளர் திருநாவுக்கரசும் விரிவுரையாளர்களும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களது முயற்சிகளைப்பாராட்டிச் சிறப்புரையாற்றினார்கள்.







தென்மராட்சியில் நடைபெற்ற லெப். சீல... வேங்கை ஆனந் ஆகியோரின் நினைவு நிகழ்வில்...



(படங்கள் : -ஆன்சிலின்)

# லெப்.சீலன், வீ.வே.ஆனந் ஆகியோரின் 22 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு

(தென்மராட்சி)

விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் படைத்தளபதி லெப்.சீலன் மற்றும்வீரவேங்கை ஆனந் ஆகியோரின் 22ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் இம்மாவீரர்கள் வீரச்சாவடைந்த மீசாலை அல்லாரை சீலன் பூங்கா பகுதியில் நேற்றுமுன் தினம் மாலை 5.30 மணியளவில் நடைபெற்றன.

மீசாலை வர்த்தக சங்கத் தலைவர் வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை மீசாலை மாதர்சங்க செயலாளர், திருமதி-அருள்நாயகி சரோஜா தேவி, சாவகச்சேரி பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ப் பிரியன், தமிழீழ மாணவர் பேரவை பொறுப்பாளர் கண்ணன், தென்மராட்சி மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் அலைவாணி, பொது அமைப்புகளின் தலைவர் அருந்தவபாலன், ஆகியோர் ஏற்றி வைத்தனர். சிறப்புரையினை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி, ஆற்றினார். மாவீரர் படங்களுக்கான மலர் மாலையினை தென்மராட்சி கோட்ட அரசியல்துறை பொறுப்பாளர் ஈஸ்வரன் அணிவித்தார். இந்த நிகழ்வில் ஏராளமான பொதுமக்களும், பொது அமைப்பின் பிரதிநிதிகளும், மாணவர்களும் கலந்து கொண்டனர். (28)

# ஹாட்லிக் கல்லூரி மைதானத்தை பயன்படுத்தப் படையினர் இடையூறு!

யாழ். பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில்மாலை நேரத்தில் மாணவர்கள் விளையாடுவதற்கு சிறிலங்காப் படையினர் தடைவித்துள்ளனர்.

இதனால் மாணவர்கள் பயிற்சி மேற்கொள்வது முதல் போட்டியில் கலந்துகொள்வதிலும்சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக மாலை நான்கு மணிக்கே மைதானத்தை ஆக்கிரமிக்கும் படையினர் மாணவர்கள் மைதானத்தில்இறங்குவதற்குத் தடைவிதித்துள்ளனர்.

இதனால் தமது விளையாட்டுத் திறனை வளர்த்துக்கொள்ள பயிற்சியில் ஈடுபட முடியாத நிலையை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாகத் தற்போது பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் அஸ்ராக்கிண்ணக்கிரிக்கெட் போட்டி ஒன்று ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் போட்டியை நேரகாலத்துடன் முடித்து விட்டு வெளியேறுமாறு படையினர் நிபந்தனை விதித்தனர். இது மாணவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கால்பந்து, கிரிக்கெட், வலைப்பந்தாட்ட மற்றும் பல போட்டிகளில் ஹாட்லிக் கல்லூரியில் இருந்து முன்னணி வீரர்கள் பலர் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் படையினரின் இந் நடவடிக்கை எதிர்காலத்தில் அந்நிலையை அற்றுப்போகச் செய்துள்ளதாக வுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழ் மாணவர்களின் விளையாட்டுத் திறமையை மழுங்கடிப்பதை நோக்காகக் கொண்டே படையினரின் இச்செயற்பாடு அமைந்துள்ளதாகக் கல்விச் சமூகம் தெரிவித்துள்ளது.

# இந்து மாநாட்டிற்குள் நுழைந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் விரட்டியடிப்பு

யாழ்.கல்வியியற் கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றஇந்து மாநாட்டிற்குப் பெருந்தொகையான பொலிசாருடனும் சிறிலங்கா இராணுவத்துடனும் வருகை தந்திருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் மதனராஜாவுக்கும், மாணவர்களுக்குமிடையில் கடும் வாக்குவாதத்துடன், பெரும் முறுகல் நிலை தோன்றியது.

ஈ.பி.டி.பி உறுப்பினருக்கு எதிராக மாணவர்கள் கோசமிட்டதுடன் இனத்துரோகியே இவ்விடத்தைவிட்டு வெளியேறு என்று ஆத்திரத்துடன் மதனராஜாவுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து மாநாட்டைவிட்டு மதனராஜா பொலிசாரின் பாதுகாப்புடன் வாகனத்தில் ஏறி சென்றதாகத் தெரியவருகிறது. இந்து கலாச்சார அமைச்சு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது. (28)

# நல்லூர் பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப்படும்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு புதிய கட்டடம் நல்லூர் மாநகரசபை அமைந்துள்ள காணியில் அமைக்கப் படவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகம் அமைப்பது சம்பந்தமான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் தலைமையில் இடம் பெற்றது.நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இக்கலந்துரையாடல் இடம்பெற்றதைத்தொடர்ந்து இம்முடிவு எடுக்கப் பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, மா. க. ஈழவேந்தன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (41)



கைதடியில் புதிதாக அமைக்கப்பட்ட இரும்புப் பாலத்தில் நேற்று முன்தினம் காலை மழைபெய்து கொண்டிருந்தவேளை விபத்துக் குள்ளாகி சேதமடைந்துள்ள வாகனங்களின் ஒரு பகுதியை படத்தில் காண்க. இதில் பல விபத்துக்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படம் -ஆன்சிலின்)

# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி பட்டதாரி பயிலுனர்கள் ஆர்ப்பாட்டம்

கடந்தவருடம் பட்டதாரி பயிலுனர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்படாதவர்கள் நேற்று பிற்பகல் கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்ட இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நிதி அமைச்சை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் இந்த ஊர்வலத்தைத் தடுக்கும் நோக்கில் பொலிசார் லோட்டஸ்வீதியில் உள்ள பௌத்த விகாரைக்கு முன்னால் வீதித்தடையினைப் போட்டு அவர்களை மறித்தனர். இதனை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியில் அமர்ந்து தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

பின்னர் ஆப்பாட்டக்காரர்களின் பிரதிநிதிகள் சிலரை நிதியமைச்சிற்குச் சென்று உரிய அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்த பொலிசார் அனுமதி வழங்கினர்.

அதேவேளை, இந்த விடயம் தொடர்பாக சனாதிபதி செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.அந்த அறிக்கையில், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி இந்தப் பட்டதாரி பயிலுனர் அனைவரையும் நிரந்தர சேவையில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில அ[illegible]மச்சுக்களின் [illegible] அசமந்தப் போக்குக் காரணமாகவே இ[illegible]ர்களை நிரந்தரமாக்குவத[illegible] காலதாமதம் ஏற்பட்டதாகவும் சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்துக் கோரி வழக்கு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமெனக் கோரி உயர்நீதிமன்றத்தில் அக்கரைப்பற்று மற்றும் கல்முனை பிரதேச முஸ்லிம்கள் இருவர் நேற்று முன்தினம் அடிப்படை மனித உரிமை வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த இற்றா லெப்பை ஜப்பர் மற்றும் கல்முனையைச் சேர்ந்த மொகமட் இப்ராகிம் மொகமட் ஆகியோர்தாக்கல் செய்துள்ள இந்த மனுக்களில் பிரதிவாதிகளாகக் கட்டமைப்பில் ஒப்பமிட்டுள்ள சிறிலங்கா புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.ஜயசிங்க, தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகப் பிரதிப் பணிப்பாளர் ரஞ்சன் சண்முகலிங்கம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு 33 சதவீத இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள், இக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்படாமை மூலம் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.சம அந்தஸ்து வழங்கக் கோரி அரசாங்கத்திற்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர்கள் இந்த மனுவில் வலியுறுத்தியுள்ளனர்.

# யுத்த நிறுத்தம் முறிவடையும் நிலைக்கு சனாதிபதியும், அரசுமே முக்கிய காரணம்

## — ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

போர் மீண்டும் மூழும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவித்திருக்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி யுத்தம் ஒன்று, மூண்டால் அதற்கான முழுப்பொறுப்பையும் சனாதிபதி சந்திரிகாவே ஏற்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இருபது வருடகால யுத்தத்தை மிகக்கஷ்ரப்பட்டு முடிவுக்கு கொண்டுவந்து மூன்று வருடங்களாக பாதுகாக்க மு[illegible]ந்தது. ஆனால் அரச நிர்வாகம் சீராக செயற்படாமையே யுத்த நிறுத்த உடன்படிக்கை முறிவடையும் நிலையை உருவாக்கியுள்ளதாக அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வியாழன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகமான கேம்பிரிஜ் டெரஸில் நடைபெற்ற முக்கியமான ஐக்கிய தேசியக்கட்சியின் செய்தியாளர் மாநாட்டின்போது முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரும், களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரட்ண இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் 2002இல் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் துப்பாக்கிகள் ஓய்வுக்கு வந்தன. பேச்சுவார்த்தைகளும் நடந்தன. அதன் பின்னரும் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை கடந்த மூன்று வருடங்களாக பாதுகாக்கப்பட்டு வந்தது

ஆனால் அரசின் அண்மைக்கால நடவடிக்கைகளால் தமிழீழ விடுதலைப்புலிகள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர். பல தடவைகள் ஆட்சேபனையை வெளிப்படுத்தி நியாயம் கோரி நின்றனர். அரசோ, பாதுகாப்பு தரப்போ இதனைப்பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் இருந்தமையால் இம்மாதம் முதலாம் திகதி விடுதலைப்புலிகள் அரசுக்கு காலக்கெடு விதித்தனர்.

போர்நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல 14 நாட்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர். இதன்படி 14 ஆம் திகதியுடன் அந்த 14 நாள் முடிவுக்கு வந்துள்ளது. இந்த நேரத்தில் யுத்தம் தொடங்குவதற்கான ஆபத்து ஏற்பட்டுள்ளது. அரச கட்டுப்பாட்டு பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகள் தமது அலுவலகங்களை மூடிவிட்டு தமது பிரதேசங்களுக்கு செல்லத் தொடங்கியுள்ளனர்.

இவையாவும் வெறும் விளையாட்டாக பார்க்க முடியாது. நாடு பேராபத்தை எதிர்நோக்கியுள்ளது. விடுதலைப் புலிகள் மீண்டும் போர் என்ற நிலைக்கு வலிந்து தள்ளப்பட்டால் அதன் விளைவுகள் பற்றி சிந்திக்கவே பயமாக உள்ளது.

சந்திரிகாவும் அவரது அரசும் கூறும் பொய்களால் எந்தப் பயனும் இல்லை. அவர் உறுதியான ஒரு நடவடிக்கையையும் எடுப்பதாக தெரியவில்லை. ஸ்திரநிலையற்ற அரசாங்கத்தால் எதுவும் செய்யமுடியாத நிலை தோன்றியுள்ளது. அரச நிர்வாகம் சீராக இல்லாமையே விடுதலைப் புலிகள் இந்த முடிவை எடுக்க தள்ளப்பட்டுள்ளதாக நாம் கருதுகின்றோம்.இன்றைய நிலையில் மீண்டும் போர் மூளுமானால் அதற்கான முழுப் பொறுப்பையும் சனாதிபதியும் அவரது அரசுமே ஏற்கவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முத்தலிப் கொலையில் கைதான ஊடகவியலாளருக்கு விளக்க மறியல்


(கொழும்பு)

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி லெப்.கேணல் நிசாம் முத்தலிப் கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் சஞ்சீவ் ஓகஸ்ட் 26 ஆம் திகதி வரை நீதிமன்ற விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.கொழும்பு கூடுதல் நீதிபதி கியான் பலப்பிட்டிய முன்னிலையில் வியாழக்கிழமை சஞ்சீவவைச் சிறிலங்கா குற்றத்தடுப்பு திணைக்கள அதிகாரிகள் ஆஜர்படுத்தினர்.

# பொதுக்கட்டமைப்பு: ஜே.வி.பி யின் மகிழ்ச்சி நிலைக்குமா?

சிறிலங்கா அரசாங்கத்துக்கும்- விடுதலைப்புலிகளுக்குமிடையே பலத்த இழுபறிகளின் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பு உடன்பாடு பல்வேறு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்பட்டு நிற்கிறது. அதில் முதலாவது நீதிமன்றத்தீர்ப்பானது அதன் பல்லைப் பிடுங்கி விட்டதாக ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் மகிழ்ச்சி கொண்டுள்ளார். அதே வேளை இன்னும் பல வழக்குகள் இதன் மீது இடப்பட்டுள்ளன. அவற்றுக்கான விசாரணைகளும் இடம் பெறவுள்ளன.

உண்மையில் உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் வழங்கிய இடைக்காலத் தீர்வு குறித்து இன


ஐ.தே.க.வின் பேரணி

சியை உருவாக்கிக் கொள்ள உயிர் விலை கொடுத்துப் போராடி வருகிறார்கள். அதில் ஒரு அங்கம்தான் இன்றைய நகர்வுகளும்.

ஆனால் ஜே.வி.பி.யானது தனது இரண்டு எதிரிகளுக்குச் சகுனப் பிழையை உருவாக்குவதற்காக தனது மூக்கை மிக மோசமாக அறுத்துக் கொண்டுள்ளது என்றுதான் கூற வேண்டும். அவர்கள் மட்டுமல்ல இனவாதிகளும்தான்.

ஏனெனில் தமிழ் மக்களின் விடயத்தில் சிங்கள ஆளும்வர்க்கமும் இனவாதிகளும் அரச இயந்திரமும் எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதற்கு சிறந்த உதாரணங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

கில் வைப்பிலிட்டதாகவும் இது குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசாரணை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான குற்றச்சாட்டானது திருகோணமலையில் ஒரு அடிமட்ட அரச ஊழியர் மீது மட்டுமல்ல, உயர் அதிகாரிகள், மாகாண சபை அமைச்சர்கள், அமைச்சர்கள் எனச்சென்று இப்பொழுது பிரதமர் வரை வந்திருக்கிறது. இவ்வாறான நிலையில் இது தொடர்பாக கண்காணிக்க ஓர் அமைப் பின் அவசியம் வலியுறுத்தப்பட்டதுடன் நிதியை சிறிலங்கா ஆட்சியாளரின் கையிலல்லாது வேறு நிதி அமைப்புகளிடம் வழங்க உண்மையில் மனிதாபிமான நோக்கம் கொண்ட நாடுகளும் அமைப்புகளும் விரும்புகின்றன.

இந் நிலையில் ஜே.வி.பி.யின் இம் முட்டுக்கட்டையானது தென் பகுதி வாக்குகளை ஜே.வி.பி. நினைப்பது போல அதற்குத் திரட் டித் தருமா? அதாவது தமிழ் மக்க ளுக்கு சுனாமி நிதியுதவிகள் கிட்டாமல் செய்து விட்டமை தென் பகுதி

மக்கள் இல்லை. ஆனால் தொலைக்காட்சிகளில் தான் மக்கள் இருக்கிறார்கள் எனக் கூறி ஜே.வி.பி தன்னைத் தேற்றிக் கொள்ள முயன்றது. ஆனால் நிலைமை அவ்வாறே இருந்து விடவில்லை.

அத்துடன் இதன்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வலைகளைப் புரிந்து கொள்ள ஐ.தே.க வினால் முடிந்திருக்கின்றது. இதனால் தான் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளையும் ரணில் விக்கிரமசிங்க வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுது சனாதிபதி சந்திரிகாவும், அதனைப் புரிந்து கொண்டு கடல் பாதுகாப்பு வலயப்பிரச்சினையில் அதாவது 100 மீற்றர் எல்லையாக வகுத்திருந்த தூரத்தை சற்றுத் தளர்த்தியிருக்கிறார். அவர் தனது ஆட்சியை தனது அதிகாரத்தையும், அரசியலமைப்பையும் பயன்படுத்தி ஒரு வருட காலத்துக்கு நீடித்துக் கொள்ளலாம். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை இவ்வாறு நீடித்துச்செல்வதானது 1977 இல் சு.க சந்தித்த நிலையையே ஏற்படுத்தும்.


ஜே.வி.பியானது இப்பொழுது சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடனான உறவை முறித்துக் கொண்டிருந்தாலும், அன்று பழுத்த இடதுசாரிகளான என்.எம்.



என்பவற்றை ரணில் பெற்றுத் தருவார் என்பதன் அடிப்படையிலேயே 2001 டிசம்பரில் ரணிலை மக்கள் ஆட்சிப்பீடம் ஏற்றினர். நிறைவேற்று அதிகாரத்துக்கும் இனவாதத்திற்கும் அஞ்சாது ரணில் சமாதான முயற்சியை வேகமாக முன்னெடுத்திருப்பாராக இருந்தால் அவர் இப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருந்திருக்க வேண்டிய தேவை எழுந்திராது.

இன்றும் அதேநிலையிலேயே சனாதிபதி சந்திரிகா இருக்கின்றார். அதாவது எந்தவிதத்திலுமே பொருந்தாத கொள்கைகளைக் கொண்ட ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்ததன் பலனை இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறார்.

அதாவது ஜே.வி.பி க்கு அஞ்சி தமது திட்டங்களை முன்னெடுக்க மாட்டாமலும் இலங்கை என்றுமே சந்தித்திராத ஓர் இயற்கை அனர்த்தத்தைச் சந்தித்த வேளையில் அதிலிருந்து மக்களை மீட்டெடுக்க -தென்பகுதி மக்களை கூட


உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பின்

வாதிகள் மகிழ்ச்சி கொள்ளக் கூடியதாகவே உள்ளது. அதிலும் இனவாதிகளாக மட்டும் இல்லாது அதிகார வெறிபிடித்தவர்களாகவும் இவர்கள் இருப்பதானது தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழை என்ற ரீதியில் இரட்டிப்பு மகிழ்ச்சியை வழங்குவதாகவும் இருக்கும்.

இந்தப் பொதுக்கட்ட மைப்பு உடன்பாட்டின் செயலாக்கம் குறித்து தமிழ் மக்கள் என்றுமே நம்பிக்கை கொண்டவர்கள் அல்ல. அதில் மட்டுமல்ல சிங்கள ஆட்சியாளர்கள், இனவாதிகள், மக்களுக்கு காருண்யம் பற்றி போதிக்கும் பௌத்த துறவிகள், இவர்கள் எல்லாம் கருணைக் கண்கொண்டு தம்மைப் பார்ப்பார்கள் என்ற நம்பிக்கையெல்லாம் அவர்களிடத்தில் என்றுமேயில்லை.

அதேவேளை அரச இயந்திரத்தின் எந்த அங்கமாவது தமக்காக அசையும் என்ற நம்பிக்கை கொள்ளவும் அவர்களுக்கு எந்தக் காரணமும் இல்லை. அதன் காரணமாகவே அவர்கள் தமக்கென ஓர் ஆட்

தமிழ்மக்களின் உரிமைகளை வழங்க மட்டுமல்ல இவர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள மட்டுமல்ல, உலகமே இரக்கம் கொண்ட மனித அவலத்திலிருந்து அம்மக்கள் மீளுவதற்குக் கூட இவர்கள் எவ்வாறு முட்டுக்கட்டை போடுவார்கள் என்பது வெளிப்படுத்தப்படுகிறது.

மறுபுறம் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்குக் கூட இவர்கள் உதவிகள் கிடைக்கவிடாது தடுக்கும் செயல்களில் ஈடுபடுவதானது அவர்களின் அதிகார வெறி எத்தகையது என்பதை அம்மக்களுக்கு புரிய வைப்பதாகவுள்ளது.

ஆழிப் பேரலையால் பெரும் அழிவைச் சந்தித்த மக்களின் துயரங்களைப் போக்கவென உலக நாடுகளும் அமைப்புகளும் மக்களும் வழங்கிய நிதியில் சிறிலங்காவின் பிரதமர்கூட மோசடி செய்ததான குற்றச்சாட்டு இப்பொழுது எழுந்துள்ளது. சுமார் 80 மில்லியன் ரூபாவை தனது சகோதரனினதும் மனைவியினதும் தனிப்பட்ட கணக்

மக்களின் வாக்கைப் பெற உதவுமா? என்ற கேள்விக்கு ஜே.வி.பி. அவ்வாறு நம்புகிறது என்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆனால் உண்மையான நிலை அவ்வாறு இல்லை என்பதையே கடந்த காலச் சம்பவங்கள் காட்டுகின்றன. ஏனெனில் கடந்தமாதங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்கள் தமக்கு சுனாமியிலிருந்து மீட்சிபெற அரசாங்கம் எதனையும் செய்யவில்லை எனக் கூறி ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருக்கின்றனர். அத்துடன் சுனாமி தாக்கி 200 நாட்களாகி விட்ட நிலையிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதிமக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

இதனைவிட ஐ.தே.க 160 கிலோ மீற்றர் தூரம் நடத்திய மக்கள் சக்திப்பேரணியானது பெரும்பாலும் சுனாமி தாக்கிய பிர தேசங்களை அடியொற்றிதாகவே நடத்தப்பட்டுள்ளது. “இந்தப் பேரணியில்

பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பீற்றர் கென்மன் போன்றோர் எவ்வாறு படுதோல்வியைத் தழுவினார்களோ அதே நிலைக்கே இவர்களும் செல்ல வேண்டிவரும்.

அதேவேளை கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தல்களை எடுத்துப்பார்த்தால் சிங்கள மக்கள் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது விலைவாசி அடிப்படையிலேயே தெரிந்தெடுத்திருக்கிறார்கள். 17 வருட ஐ.தே.க ஆட்சிக் காலத்தின் பின் சனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்கவை சமாதானம் அதன் மூலம் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் அடிப்படையிலேயே தெரிவு செய்தார்கள்.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவின் சுமார் ஏழு வருட ஆட்சிக் காலத்தில் சிறிலங்காவானது பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி நிலையை அடைந்து சென்றது. இவ்வேளையில் சமாதானம் அதனூடான பொருளாதார வளர்ச்சி

மீட்டெடுக்க முடியாமலுமான செயலற்ற நிலைக்கு அரச இயந்திரம் தள்ளப்பட்டுள்ள நிலையும் காணப்படுகின்றது.

இப்பொழுதுள்ள ஆட்சியானது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எவ்வாறாயினும் தனது பதவிக்காலத்தை ஒரு வருட காலத்துக்கு நீடித்து இறுதிக்காலம் வரை நிறைவேற்று அதிகாரத்தை தக்க வைப்பதற்கானதாகவே இருக்கின்றது.

**வேலவன்**

அத்துடன் அரசியலமைப்பை மாற்றி தொடர்ந்தும் தமது அரசியல் வாழ்க்கையை நீடித்துக்கொள்ளும் முயற்சியையும் அவர்கைவிட்டு விடவில்லைஎன்பதை பாராளுமன்றத்தில்தனிநபர் பிரேரணையொன்று கொண்டு வரப்படஇருப்பது வெளிக் காட்டுகிறது. எவ்வாறாயினும் மக்களின் துன்பத்தைக் கவனியாது இவ்வாறு என்ன தான் முயற்சி எடுப்பினும் அது வெற்றியளிக்காது என்பதே வரலாறாகும்.

## நிவாரண உதவிகளைப் பெறும் நோக்குடனேயே பாதிப்புற்றோர் முகாம்களில் வாழ்கின்றனர்

### அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கியிருக்கும் முகாம்களும், கூடாரங்களும், அடுத்த மாத இறுதிக்குள் முற்றுமுழுதாக அகற்றப்படும் என்று நகர அபிவிருத்தியமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ளார்.

இதுகுறித்து மங்கள சமரவீர கூறியதாவது:

அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஆழிப் பேரலையினால் இடம்பெயர்ந்துள்ள 42,353 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த வீடுகளில் வசிக்கும் போதிலும் அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பல்வேறு அமைப்புக்களிடமிருந்து கிடைக்கும் நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக தொடர்ந்தும் கூடாரங்களில் வாழ்ந்து வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அவ்வாறானவர்களைக் கண்டுபிடித்து அவர்களை உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்த பொலிசாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்கள் 84 முகாம்களில் தங்கியுள்ளனர்.

அங்கு வசிக்கும் 4,784குடும்பங்களுக்கென 4,288 தற்காலிக வீடுகள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன்பின்னர் கிடைக்கும் நிவாரணங்களை மாவட்ட செயலாளர்கள் மற்றும் கிராம சேவகர்களூடாக பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# விசுவமடு பிரதேச மக்களுக்கு நிரந்தர வைத்தியசாலை அவசியம்!



டாக்டர் தி.மகேந்திரன்

1996 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் ஒட்டுசுட்டான் பகுதியை ஆக்கிரமித்ததன் பின்னர் அங்கு இயங்கி வந்த பல்வேறு செயலகங்களும் இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளில் இயங்கி வந்தன. இவ்வாறு இடம்பெயர்ந்த அப்பகுதி மத்திய மருந்தகம் விசுவமடு மாணிக்கபுரம் எனும் கிராமத்தில் இயங்க ஆரம்பித்தது. இதன் மூலமாக அப்பகுதியில் வாழ்ந்த மக்களின் மருத்துவத் தேவைகள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டு வந்த . மாணிக்கபுரம் கிராமம் மட்டுமன்றி அதனை அண்டிய கிராமங்களான வள்ளுவர்புரம், இளங்கோபுரம், தேராவில், பாரதிபுரம், குமாரசாமிபுரம், விசுவமடு கிழக்கு, உடையார்கட்டு போன்ற பல்வேறு பகுதிகளிலும் வாழ்கின்ற மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெற்று வந்தனர். நாள் ஒன்றுக்கு வெளிநோயாளர் பிரிவில் 300 வரையான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வந்த காலமும் உண்டு. இப்பெருந்திரளான மக்கள் இவ்வைத்தியசாலையை நாடி வரக்காரணம் என்னவெனில் புதுக்குடியிருப்பில் ஓர் வைத்தியசாலையும் தருமபுரத்தில் ஓர் வைத்தியசாலையும் உள்ள நிலையில் இடைப்பட்ட பகுதியாகிய ஏறத்தாழ 22 கிலோமீற்றர் தூரத்தை உள்ளடக்கிய பகுதியில் எந்தவொரு வைத்தியசாலை வசதியும் இல்லாமையே காரணமாகும்.

இது இவ்வாறிருக்க ஒட்டுசுட்டான் பகுதி மீள்குடியமர்விற்குட்படுத்தப்பட்டு வருகின்ற காரணத்தினால் இவ்வைத்தியசாலை மீண்டும் அங்கு சென்று இயங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மீண்டும் இவ் வைத்தியசாலை அங்கு எடுத்துச் செல்லப்பட்டபின் மாணிக்கபுரத்தில் இயங்கிய வைத்திய சேவை முடங்கி விடுமானால் மேற்குறிப்பிட்ட கிராமங்களைச் சேர்ந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் நிலை என்ன? இதற்கு பதிலளிக்க வேண்டிய அதிகாரிகளின் பதில் எவ்வாறு அமையப் போகின்றது என்ற எதிர்பார்ப்போடு இப்பகுதி மக்கள் உள்ளனர்.

இவ்வைத்தியசாலை இப்பகுதிக்கு எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்ததென வைத்தியசாலை ஆரம்பித்த நாள் தொடக்கம் இங்கு சேவையாற்றி வந்த வைத்தியர் திருநாவுக்கரசு மகேந்திரன் இவ்வாறு கூறினார்.

விசுவமடு தொடக்கம் உடையார்கட்டு வரைக்கும் எட்டிற்கும் மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. இப்பகுதிகளில் எந்தவிதமான வைத்திய சேவை நிலையங்களும் இல்லை. இதனால் இங்கு மக்கள் இவ்வைத்தியசாலை இயங்குவதற்கு முன்னர் பல மருத்துவ சிக்கல்களை எதிர்நோக்கி வந்துள்ளனர். கிராமங்களின் உள்வீதிகள் சீரற்று காணப்படுவதனால் போக்குவரத்து சிக்கல்களையும் இம்மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். அத்தோடு மிகவும் பின்தங்கிய பகுதியாகையால் அவசர சிகிச்சை களை பெறுவதற்குக்கூட மக்கள் தூர இடங்களுக்கு செல்ல முடியாதிருந்துள்ளனர். இங்கு மலசலகூட வசதிகள்கூட முற்றாக இல்லாததனாலும் மண்கிணறுகளே பாவனையில் உள்ளதனாலும் தொற்று நோய்கள் அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளே அதிகம் உள்ளன. இதனால் இவ்வைத்தியசாலை இங்கு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இப்பகுதி மக்கள் ஓரளவு சுகதேகிகளாக மாறிக்கொண்டு வந்ததனை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அத்தோடு குடிநீர் பற்றாக் குறையாகவுள்ளதோடு மழை காலங்களில் நீர் தேங்குவதற்கான தாழ்வான பகுதிகளாகவும் உள்ளதனால் இனிவரும் மழை காலத்தில் இங்கு தொற்று நோய்கள் உருவாகும் நிலையும் உள்ளது. அத்தோடு இங்கு முதலுதவி சிகிச்சைகளை வழங்கக் கூட மக்கள் மருத்துவ ரீதியான அனுபவங்கள் குறைந்தவர்களாகவேயுள்ளனர்.

எனவே இப்பகுதி மக்களின் நிலையினையும் சனத்தொகையினையும் பொறுத்த வரையில் இங்கு வைத்தியசாலை ஒன்று மிக அவசியமான தேவையாகவுள்ளது. இது தொடர்பாக நாங்கள் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியினூடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். இருந்தபோதும் இங்கிருந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால்தான் இதன் முக்கியத்துவம் உணரப்படும்.

இருப்பினும் இம்மாவட்டத்தை பொறுத்த வரையில் மருத்துவப்பணியாளர்கள் பற்றாக் குறையாகவும் உள்ளதனால் உயர்மட்டங்கள் இவற்றை கருத்தில் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. தனியார் மருத்துவ நிலையங்கள் கூட இப்பகுதிக்கு அண்மையில் இல்லாததினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தை கருத்தில் கொண்டு செயற்படுவது அவசியமான தொன்றாக உள்ளது என கூறினார்.



கி.அ.ச.செயலர் இராஜேந்திரம்

இவ்வைத்தியசாலை ஒட்டு சுட்டான் பகுதிக்கு எடுத்துச்செல்லப்படுவது அப்பகுதி மக்களின் மருத்துவத் தேவையை நிவர்த்தி செய்வதற்காகவே என்பதை நாம் அறிவோம்.

இருந்த போதும் எமது பகுதிக்கும் ஓர் மருத்துவ சேவையினைவழங்கக்கூடிய வைத்தியசாலையை அமைத்துத்தர துறை சார்ந்த அதிகாரிகள் முன்வர வேண்டுமென கேட்டுக்கொண்ட மாணிக்கபுரம் கிராம அபிவிருத்திச்சங்க செயலாளர் இராஜேந்திரம்

மேலும் இவ்வைத்தியசாலை அக்கிராமத்திற்கு எவ்வளவு முக்கியமான தென்பதை இவ்வாறு கூறினார்.

1996 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த இவ் வைத்தியசாலையை இயக்குவதற்கான பகுதியாக இந்தப்பகுதியை புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் தெரிவு செய்து இங்கு இருந்த பொது நோக்கு மண்டபத்தில் இயங்க வைக்க ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார். அன்று தொடக்கம் இன்று வரைக்கும் இவ்வைத்தியசாலை இம்மக்களுக்கு சேவையாற்றி வருகிறது. இங்கே நாளொன்றிற்கு 300இற்கு மேற்பட்ட மக்கள் சிகிச்சை பெற்று வந்துள்ளனர். இப்பகுதிக்கு நிரந்தர வைத்தியசாலை ஒன்று தேவையாகவுள்ளது என்பதை சுகாதார வைத்திய அதிகாரிக்கு நாம் கடிதம் மூலம் மூன்று வருடங்களுக்கு முன்னரே தெரியப்படுத்தியிருந்தோம். ஆனால் இங்கு இதுவரை தற்காலிக வைத்தியசாலை ஒன்று இயங்கிவந்ததனால் அதற்கான பதில் எதனையும் அவர்கள் தரவில்லை. ஆனால் இனிவரும் காலத்தில் இவ்வைத்தியசாலை எடுக்கப்படவுள்ள நிலையினை கருத்தில் கொண்டு இதற்கான பதிலை நாம் கேட்டுள்ளோம்.

இந்தப்பகுதியை பொறுத்த வரையில் அவசர சிகிச்சை ஒன்றினை பெறுவதற்குக்கூட இங்கிருந்து 7கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ளதருமபுரம் வைத்தியசாலைக்கோ அல்லது 15 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கோ செல்ல வேண்டியுள்ளது. இதன்காரணமாக முன்னைய காலப்பகுதியில் அனேகமான நோயாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே இந்த வைத்தியசாலை இல்லாதநிலையில் இங்குள்ள மக்கள் மீண்டும் ஒரு நோய்வாய்ப்பட்ட சமுதாயமாக உருவாவதற்கான சூழல் ஏற்படுமென நாங்கள் கவலைப்படுகிறோம்.

எனவே இவ்வைத்தியசாலை எடுக்கப்பட்டாலும் இதே இடத்தில் மீளவும் தற்காலிகமாகவாவது ஒரு வைத்திய சேவையினை வழங்க சம்பந்தப்பட்ட திணைக்களமும் அதிகாரிகளும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

எனவே எமது தேசத்தின் எதிர் காலத்தை நிலையானதாக அமைப்பதற்கு ஆரோக்கியமான சமுதாயமே அவசியமென்பதை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டுமென்பதும் அப்பகுதி மக்களின் வேண்டுகோளாக உள்ளது.

**— இ.ச.சி —**


## கிராமிய அபிவிருத்தி வங்கியில் பயனாளிகளுக்கு ஒரு கோடியே 26 இலட்சம் ரூபா கடன் வழங்கல்

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கியால் இவ்வாண்டு யூன் மாதம் 407 பயனாளிகளிற்கு ஒரு கோடியே இருபத்தாறு இலட்சத்து நாற்பத்தெண்ணாயிரத்து இருநூற்றி நாற்பத்தேழு ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் சிறு போக பயிர்ச்செய்கை கடனாக 213 பயனாளிகளிற்கு 45,40,420 ரூபாவும், சுய தொழில் கடனாக 126 பயனாளிகளிற்கு 40,93,000 ரூபாவும், தொழிற்துறை மேம்பாட்டுக்கடனாக 16 பயனாளிகளிற்கு 21,06,000 ரூபாவும், சூரிய மின்கலத்தொகுதிக்கடனாக 26 பயனாளிகளிற்கு 9,54,400 ரூபாவும் கடனாக வழங்கப்பட்டுள்ளதாக கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

நிதிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும், கடனுதவித் திட்டங்கள் மூலமும் மக்களின் வாழ்வியலிற்கு உறுதுணையாகவும் இவ் வங்கி செயற்படுவது குறிப்பிடத் தக்கது. (15)



பல வருடகாலமாக புனரமைப்புப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் பாரிய குழிகளுடன் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ள சேவியர் கடைச்சந்திக்கருகாமையிலுள்ள கிளி. ஜெயந்திநகர் கிராம வீதியினை படத்தில் காணலாம். (படம்:-சோதி)

## சிறிலங்கா முப்படைத் தளபதிகள் திருமலை நிலவரம் குறித்து ஆராய்வு

திருகோணமலை நிலவரம் பற்றி நேரில் ஆராய்வதற்காக சிறிலங்கா முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் நேற்றுமுன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்தனர்.திருகோணமலை மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கும் சிறிலங்காவின் முப்படைகளின் மாவட்டத்தளபதிகள், பொலிஸ் அதிகாரிகளுடன் முதலில் கலந்துரையாடிய முப்படைகளின் தளபதிகளும், பின்னர், இந்து,இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மதகுருமார்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

திருமலைக் கடற்படைத்தளத்தில் பிற்பகல் 3.00 மணி தொடக்கம் நடந்த இச்சந்திப்பில், பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ரவிச் சந்திரக் குருக்கள்,ஸ்ரீலஸ்ரீசுந்தரலிங்க தேசிகர், திருமலை பள்ளிவாசல் சம்மேள னத் தலைவர் ஜெயினுலாப்தீன், குழந்தையேசு தேவாலய பங்குத்தந்தை அன்னதாஸ் அடிகளார் , கோணேசராலய பரிபாலனசபையின் தலைவர்சட்டத்தரணி எம்.கேசெல்வராசா ஆகியோர்பங்குபற்றினர். சனாதிபதியின் பணிப்பின் பேரிலேயே முப்படைத்தளபதிகளின் திருமலை விஜயம் அமைந் தது என்று தெரிவிக்கப்படுகிறது. (25)

## கால் நடை வளர்ப்போர் சங்கத்திற்கு பால்கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

(மல்லாவி)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாண்டியன்குளம் துணுக்காய் கால்நடை வளர்ப்போர் சங்கத்திற்கு யு.என்.டி.பி. நிறுவனம் பால் கொள்வனவு வேலைக்காக ஒருதொகைப் பணத்தினை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதில் 10 இலட்சத்து 62 ஆயிரம் ரூபா முதற்கட்டமாக வழங்கப் பட்டுள்ளது.

இதன் வேலைத்திட்டங்கள் முடிவடைந்த பின்னர் இதற்கான மிகுதிப் பணம் வழங்கப்படும் என மேற்படி நிறுவன பிரதிநிதிகள் தெரியப்படுத்தியுள்ளதாக துணுக்காய் கால்நடை வைத்தியர் தெரிவித்துள்ளார்.

பல சிரமங்களின் மத்தியில் இயங்கும் இச்சங்கத்திற்கு இப்பணம் மிகவும் பயனுள்ளதாக இருக்குமெனவும் சகல பண்ணையாளர்களும் ஒத்துழைத்து இச்சங்கத்தினை நல்ல முறையில் இயங்க வைத்தால் மேலும் பல உதவி நிறுவனங்கள் உதவி செய்ய முன்வரும் எனவும் இப்பகுதி கால்நடை வளம் சிறப்புற அமைய ஏதுவாக இருக்குமெனவும் இச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (24)

## தேசவிரோதக் குழுத்தலைவர்கள் வவுனியாவில் இருந்துவெளியேற்றம்

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவைச் சேர்ந்த 22 பேர் வவுனியாவுக்கு ஊருடுவியிருப்பதாக தகவல்கள் வெளியானதையடுத்து சிறிலங்காப் படையினரின் பாதுகாப்புடன் புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எ.்ப் (வரதர் அணி)போன்றவற்றின் முக்கிய உறுப்பினர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(21)

# தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியகன்றவர்களுள் விழுப்புண்ணடைந்தவர்களுக்கான மருத்துவ ஆய்வு நடைபெறவுள்ளது அந்நாளில் கீழே பெயர் குறிப்பிட்டுள்ளவர்களை வருகை தருமாறு வேண்டுகிறோம்.

நாள்:– 23. 07. 2005

நேரம்:– முற்பகல் 09. 00 மணி

இடம்:– டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை, புதுக்குடியிருப்பு

| தொ இல | முழுப்பெயர் | தற்போதைய முகவரி |
|---|---|---|
| 01. | இராசதுரை நடேந்திரன் | பாஸ்கர், மே/பா.வேணாவில், புதுக்குடியிருப்பு. |
| 02. | கணபதிப்பிள்ளை அரியமனோகரி | 7ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 03. | ஐயாத்துரை பாலச்சந்திரன் | தொட்டியடி, விசுவமடு, கிளிநொச்சி. |
| 04. | கதிர்காமத்தம்பி நந்தகுமார் | 83,திருநகர், கிளிநொச்சி. |
| 05 | வைரமுத்து தேவராஜா | காமினி, மே/பா ஏரம்பப்பிள்ளையார் கோவிலடி, ஒட்டறுத்தகுளம், மல்லாவி. |
| 06 | கிருஸ்ணபிள்ளை இலங்கேஸ்வரன் | கனகசபாபதி, மே/பா உலகளந்த பிள்ளையார் கோவிலடி மேற்கு, 1ஆம் வட்டாரம்,புதுக்குடியிருப்பு. |
| 07. | இராசரெத்தினம் ஜெயகரன் | அகல்யாவீதி, அனிச்சயங் குளம், மல்லாவி. |
| 08. | குழந்தைவேல் அன்னலட்சுமி | இராசரெத்தினம், மே/பா சந்தையருகாமை, ஸ்கந்தபுரம். |
| 09 | பொன்னுத்துரை விஜயகுமார் | 768, யோகபுரம் மத்தி, மல்லாவி. |
| 10. | வீரையா தருமலிங்கம் | 8 ஆம் கட்டை, ஆரோக்கியபுரம், ஸ்கந்தபுரம். |
| 11 | சிவா சந்திரன் | துர்க்கா வீதி, 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. |
| 12. | செல்லத்துரை பத்மராசா | இராமநாதபுரம், 6ஆம் யூனிற் வட்டக்கச்சி, கிளிநொச்சி. |
| 13. | பத்மநாதன் சுரேஸ்குமார் | 168, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. |
| 14. | கந்தசாமி யோகச்சந்திரன் | மு.சந்தனம், வற்றாப்பளை, முள்ளியவளை. |
| 15. | கந்தசாமி விஜயகுமாரி | நா.சூரியகுமார் கடை, மே/பா கந்தசாமி, நெட்டாங்கண்டல், மல்லாவி. |
| 16. | நாகையா சந்திரமோகன் | புதுக்குளம், ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு. |
| 17. | மாணிக்கம் முத்தமிழ்ச்செல்வன் | மூங்கிலாறு,உடையார் கட்டு, இளங்கோ வீட்டுத் திட்டம். |
| 18. | சற்குணம் பரராஜசிங்கம் | மட்டுஅம்பாறை குடியேற்றத்திட்டம், உடையார் கட்டு தெற்கு. |
| 19. | வேலப்பொடி நடேஸ் | மட்டுஅம்பாறை குடியேற்றத்திட்டம், உடையார் கட்டுதெற்கு. |
| 20. | இராசு நல்லுசாமி | வீரபத்திரர் மே/பா, நாகேஸ் வீதி, ஒலுமடு, மாங்குளம். |
| 21. | இராசையா சிவரஞ்சன் | த.சிவநாயகம், (கபூர்) மே/பா கதிரவன்குடியிருப்பு, வடகாடு, மல்லாவி. |
| 22. | யோசப் அன்ரனி குயின்ரஸ் | கனகராயன் குளம், மே/பா மருசலீன், பண்டார வன்னியன்வீதி. |
| 23 | இலட்சுமணன் குலேந்திரன் | க.உருத்திராபதி, நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனிக்குளம். |
| 24. | தில்லையன் கிருஸ்ணபிள்ளை | காவற்துறை முன்பாக, மாங்குளம். |
| 25. | நடராசா ரகுமான் | வடகாடு, மல்லாவி. |
| 26. | சந்திரன் தியாகராசா | இளமருதங்குளம், நட்டாங்கண்டல், மல்லாவி. |
| 27. | சிவகுரு ஈஸ்வரி | 5ஆம் வட்டாரம், அம்மன்கோவில் வீதி, இரணைப்பாலை. |
| 28. | நடராசா சந்திரகுமார் | இளமருதங்குளம், நட்டாங்கண்டல், மல்லாவி. |
| 29. | தர்மலிங்கம் விக்கினேஸ்வரன் | இரவயல், உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு. |
| 30 | பூபாலப்பிள்ளை தங்கமணி | புதிய குடியிருப்புத்திட்டம், உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு. |
| 31. | குமாரவேலு பாஸ்கரன் | 6ஆம் கண்டம், மானரூபி, ஒட்டுசுட்டான். |
| 32. | மெய்கண்டதேவன் திலீபன் | மே/பா அருந்தவராசா, 7ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு. |
| 33. | சிவராசா விக்கினேஸ்வரன் | வட்டுவாகல், முல்லைத்தீவு. |
| 34. | நடராசா விஜயலட்சுமி | 8 ஆம் வட்டாரம், மந்துவில் புதுக்குடியிருப்பு. |
| 35. | பாலசுப்பிரமணியம் தனீஸ்வரன் | 2ஆம் கண்டம், கனகரத்தினபுரம் முத்தையன் கட்டு |
| 36. | சிவலிங்கம் மேகலராஜ் | மே/பா க.குலசேகரம், ஆ.பகுதி, இல:185,தேவிபுரம் |
| 37. | அன்னலிங்கம் நிதிபன் | இல:15, பரமநாதன், கஸ்தூரியார்வீதி, 185/1, கிளினிக் ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| 38. | மகாதேவன் கவீந்திரன் | மே/பா இ.குமுதினி, இல:589 7 ஆம் யுனிற் தர்மபுரம். , |
| 39 | புஸ்பராசா தவராசா | மே.பா பு.தவராசா, திலக்கண்ணாச்சி குடியிருப்பு, கைவேலி, புதுக்குடியிருப்பு. |
| 40 | செல்வரட்ணம் இளங்கோ | புதியபுன்னை நீராவியடி, இல:263, விசுவமடு |
| 41. | ஆறுமுகம் கலைச்செல்வி | மே/பா கு.கணேசன், இல:02, தொப்பிகடை, கல்மடுநகர், கிளிநொச்சி. |
| 42. | கணபதிப்பிள்ளை விஜயன் | மே/பா வ.கணபதிப்பிள்ளை, 2ஆம்வட்டாரம், முள்ளியவளை. |
| 43 | மார்க்கண்டு கேதீஸ்வரன் | இல:301, பாரதிநகர், யோகபுரம், மல்லாவி. |
| 44. | இராசதுரை தவச்செல்வி | இல:18, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. |
| 45 | செல்லத்துரை சுரேஸ் | இல:41சிவநகர், உருத்திரபுரம். |
| 46. | திருநாவுக்கரசு பவனேந்திரன் | செஞ்சுடர் குடியிருப்பு, கைவேலி, சோபனா கடை, புதுக்குடியிருப்பு, |
| 47. | கிருஸ்ணமூர்த்தி குகன் | மங்கைகுடியிருப்பு, மல்லாவி, தமிழீழமாவட்ட நீதிமன்றம், மல்லாவி. |
| 48. | சுப்பிரமணியம் குணரத்தினம் | சிவகாமி அம்மன் கோவிலடி, காரைநகர். |
| 49. | சரவணமுத்து சிவானந்தன் | க.சரவணமுத்து, சுதாவீதி, சுதந்திரபுரம் சந்தி, உடையார்கட்டு. |
| 50. | சாமித்தம்பி சிவகுமார் | திலக்கண்ணாச்சி குடியிருப்பு, கைவேலி, புதுக்குடியிருப்பு. |
| 51. | தனபாலசிங்கம் ராஜகாந் | த.ராஜகாந்/குட்டி, செந்தமிழன் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு. |
| 52. | கனகசேகரம்பிள்ளை சந்திரசேகரன் | க.சந்திரசேகரன், மே/பா திருமதி.செந்தில்குமரன், நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனிக்குளம், மாங்குளம். |
| 53. | கனகரட்ணம் கமலதாஸ் | நவாலிதெற்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம். |
| 54. | சங்கரப்பிள்ளை பிரபாகரன் | ச.பிரபாகரன், மே/பா சி.தவமணி, முதலாம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு. |
| 55. | நவரத்தினம் நாகசீலன் | சிறாப்பர்தோட்டம், வற்றாப்பளை, முள்ளியவளை. |
| 56. | குலசேகரன் குலமோகன் | இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. |
| 57 | சோமசுந்தரம் கஜேந்திரன் | இல:150, உதயநகர் மேற்கு, உதயநகர், கிளிநொச்சி. |
| 58. | பாலன் மாரிமுத்து | உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு. |
| 59. | ரத்தினம் மாரிமுத்து | தணிகைமாறன் குடியிருப்பு, தேராவில், விசுவமடு. |
| 60. | இராமையா கஜமோகன் | இல:136, பாண்டியன்குளம், வவுனிக்குளம். |
| 61. | பிச்சை மகேந்திரன் | மடு,சின்னப்பண்டிவிரிச்சான், மன்னார். |
| 62. | சிவஸ்கந்தா சசிதரன் | வைரவர் கோவிலடி, கே.கே.எஸ் வீதி மல்லாகம். |
| 63. | இலங்கநாதன் செல்வராஜ் | இல:72, அருள்கடை, பெரியபண்டிவிரிச்சான், மடு, மன்னார். |
| 64 | ஜயநாதன் சிவகுமார் | செல்வாநகர், கிளிநொச்சி. |
| 65. | சின்னப்பன் அந்தோனிசாமி | ஆரோக்கியபுரம், அக்கராயன் |
| 66. | செல்லத்துரை சசிகுமார் | சொர்னபுரி, அடம்பன், மன்னார். |
| 67. | வளர்மதி | சங்கத்தார் வயல், இயக்கச்சி. |
| 68. | பொன்னையா தர்மகுமார் | 7ஆம் வட்டாரம், குமுழமுனை, முல்லைத்தீவு, |

(6188)

**solidar** — ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. — Swiss Labour Assistance SA — Norwegian People's Aid

An INGO consortium including NPA, SAH and ASB

The Solidar Group is an alliance of Humanitarian NGOs, including Norwegian People's Aid (NPA), Swiss Labor Assistance (SAH) and ASB Sri Lanka, a German-based rehabilitation and development INGO, is committed to rebuilding seven villages in the North-East in the districts of Jaffna and Mullaitivu as part of its Phase III Post-Tsunami Reconstruction Plan.

Solidar is now recruiting for a range of positions to assist in the administrative and organisational responsibilities that must necessarily form an integral part of such large-scale rehabilitation work. We are currently seeking experienced individuals for the following positions:

## OFFICE MANAGER:

Reporting to the Head of office, this position is responsible for all aspects of the day to day management of the ASB/ SOLIDAR offices in Kilinochchi, including administration, finance and personnel departments. This position would suit a highly qualified professional with significant previous experience and a proven track record of managing office systems and staff in a busy NGO environment. In addition the successful candidate will be expected to take the lead in implementing new office procedures and routines aimed at strengthening the overall efficiency and performance of the office. Fluent written spoken Tamil and English language is essential as is advanced IT skills including knowledge of MS Access, Excel and Word.

## HEAD OF ADMINISTRATION:

Reporting to the Office Manager, this position is responsible for all aspects of the day to day running of the administration department, including responsibility for all administrative and secretarial support, dealing with the public, vehicle passes, staff rosta, duty list, staff management, database management, etc.This position would suit an experienced administrator Fluent written and spoken Tamil and English Language is essential as is knowledge of MS Access, Excel and Word.

## ADMINISTRATION OFFICER

Reporting to the head of Administration, this position provides general support to the smooth functioning of the Administration Department. Duties include: managing correspondence, dealing with public enquiries, managing filing, photocopying and other general activities. This position would suit a young motivated individual seeking to gain practical experience of working in a rapidly expanding office/INGO environment. Fluent knowledge of written and spoken Tamil and English and good IT skills, including Word and Excel are required.

## IT/ NETWORK ADMINISTRATOR:

Reporting to the head of Administration, this position provides general IT support for the smooth functioning of the office and all aspects of the IT systems and the IT network. This position would suit a highly qualified professional with significant previous experience and a proven track record of managing IT & network systems in a busy NGO/ comercial environment. Duties include installation, configuration and management of server and operating systems, problem solving & trouble - shooting of IT systems, providing database and network solutions, and imparting information/ training of end users. Fluent written spoken Tamil and English language is essential as are the appropriate qualifications and experience.

**DEADLINE FOR APPLICATIONS IS JULY 25TH 2005.**

Interested candidates should kindly submit CVs by email to: stevedurrant2003@yahoo.co.uk

Alternatively, please submit applications by mail to: Mrs.Chandra Jesudason, 156 Jaffna Road, Paranthan, Kilinochchi. (சி.12366)

# சோனியாகாந்தி அமெரிக்கா பயணம்

உலகத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சோனியாகாந்தி செப்ரெம்பர் 13 ஆம் திகதி அமெரிக்கா செல்கிறார்.

அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில்கிளிங்டன் வறுமை ஒழிப்பு, மத நல்லிணக்கம், பருவநிலை மாற்றம், நிர்வாக மேம்பாடு இவற்றுக்காக உலகளாவிய முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

இதற்காக செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை உலகத் தலைவர்கள் மாநாட்டை நியூயோர்க் நகரில் கூட்டியிருக்கிறார்.

அதில் பிரான்சு அதிபர் ஜக்கிராக் இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர்,நைஜீரிய அதிபர் ஓசானின் ஐக்கிய நாடுகள் சபை பொதுச்செயலாளர் கொபி அனான் உட்பட பல உலகத் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

ஐக்கிய முற்போக்குகூட்டணியின் தலைவர் சோனியா காந்தியையும் இந்த மாநாட்டுக்கு கிளிங்டன் அழைத்துள்ளார்.

அதை ஏற்று சோனியாவும் மாநாட்டில் கலந்து கொள்கிறார். அவர் செப்ரெம்பர் 13 ஆம் திகதி டில்லியில் இருந்து புறப்பட்டு செல்வாரென்று தெரிகிறது.

**solidar** — ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. — Swiss Labour Assistance SA — Norwegian People's Aid

An INGO consortium including NPA, SAH and ASB

The Solidar Group is an alliance of Humanitarian NGOs, including Norwegian People's Aid (NPA), Swiss Labor Assistance (SAH) and ASB Sri Lanka, a German-based rehabilitation and development INGO, is committed to rebuilding seven villages in the North-East in the districts of Jaffna and Mullaitivu as part of its Phase III Post-Tsunami Reconstruction Plan.

Solidar is now recruiting for a range of positions to assist in the socio-economic mobilization and community development activity that must necessarily form an integral part of such large-scale rehabilitation work. We are currently seeking experienced individuals for the following positions:

## PROJECT MANAGER FOR AGRICULTURE /NATURAL RESOURCES

### Overall responsibilities:

Develop and incorporate strategies in the overall program to ensure that aspects of food/nutritional security and environmental sustainability are fully addressed.

### Specific duties:

Home garden/Nutritional security

- Supervise, monitor and analyse the Nutritional Security / Home garden Projects conducted by TECH and RRI.
- If appropriate develop strategies to improve and expand the Nutritional Security / Home garden Projects to a wider public as well as analyzing the opportunities to expand to landscape gardening and environmentally valuable plants (greenbelt for physical protection, firewood, nitrogen fixing plants).

Other aspects of food security and natural resource management

- In close cooperation with the community development expert ensure that food security and environmental aspects are incorporated in the overall community development planning.
- Exploit opportunities for income generation through village based nurseries in non-tsunami areas promoting a balanced approach. Identify other opportunities to develop the agricultural sector in relevant communities (Gardening, livestock, forest resources) based on the PNA.
- Analyze and explore opportunities for improved natural resource management, including improved waste management and alternative energies.
- Identify training needs at partner organizations and develop proposals how to address these. Provide continuous on-the-job-training in technical aspects as well as methodology.
- Provide monthly progress reports.

## COMMUNITY DEVELOPMENT OFFICERS

Experienced personnel are required to help take the lead in the planning, implementation and management of Solidar's social mobilization, community development and capacity building activities with the local tsunami-affected population and their community and village-based groups.

A proven track record of working with local communities in the North-East is required, as is an ability to speak fluent Tamil and English Language.

## SOCIAL AND ECONOMIC MOBILIZATION OFFICERS

Experienced personnel are required to under take the day-to-day village based community planning, awareness raising and livelihoods development activity as well as enabling the successful village participation in the physical reconstruction process itself.

Experience in the areas of fishing, sustainable livelihoods, gender enterprise development and cooperatives development is sought. Experience of working with local communities in the North-East is required, as is an ability to speak fluent Tamil and English Language.

## MONITORING & EVALUATION OFFICER

**Main responsibility:** Design and maintain the Solidar database to be used as effective management tool throughout the project cycle (Management Information System).

**Specific duties:**

- Developing a computerized database based on the needs of the respective programs/sectors. The system should include
  - baseline data for planning
  - set-out targets (indicators) to measure project progress
  - activity details (e.g. individual housing MOU's – details, training courses, participants, allocation of loans or other livelihood support etc..)
  - Indicators to assess impact (negative or positive) of project interventions.
- Develop data collection sheets/forms.
- Train and guide field officers in the use of forms and updating the database as well as how to obtain information from it.
- Provide monthly reports providing the relevant information on the project progress.

**DEADLINE FOR APPLICATIONS IS JULY 25TH 2005.**

Please contact: stevedurrant2003@yahoo.co.uk

Alternatively please send to:

Harshi Gunawardena
Solidar- Office
2 Jawatta Ave
Colombo 07

or

Mrs. Chandra Jesudason,
Solidar – Office,
156 Jaffna Road ,
Paranthan - Kilinochchi.

(சி.12367)

# வரலாற்று சிறப்பு மிக்க 150 ஆவது டெஸ்ட்;

# சிறிலங்கா அணிக்கு ஆறு விக்கெட் வெற்றி






சிறிலங்காவிற்குச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள மேற்கிந்தியதீவு அணிக்கும் சிறிலங்கா அணிக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் சிறிலங்கா அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிறிலங்காவின் 150 ஆவது டெஸ்ட் போட்டியாக இது அமைந்ததால் இவ் வெற்றி சிறிலங்காவுக்கு பெருமை மிக்கதாக அமைந்துள்ளது.

கொழும்பு என்.சி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவு முதல் இனிங்சிற்காக 285 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு முதல் இனிங்சை ஆடிய சிறிலங்கா 227ஓட்டங்களைப் பெற்றது. இதன்படி 58 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடியமேற்கிந்தியத்தீவு சிறிலங்காவின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது. ஓட்டம் குவிக்கும் வாய்ப்பை தவறவிட்டதுடன், 113 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.அணித்தலைவர் சந்தர்போல் மாத்திரம் ஆட்டமிழக்காது 48 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் முரளி ஆறு விக்கெட்டுக்களையும், வாஸ் நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இறுதியில் 172 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆடிய சிறிலங்கா 38.3 ஓவரில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.




துடுப்பாட்டத்தில் சமரவீர 51 ஓட்டங்களையும், ஜெயவர்த்தன, டில்சான் முறையே தலா 48,30 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் வீழ்த்தப்பட்ட நான்கு விக்கெட்டுக்களையும் லோசன் கைப்பற்றினார். போட்டியின் சிறப்பாட்டக்காரராக சமிந்த வாஸ் தெரிவானார்.



*அஷஸ் டெஸ்ட்கிரிக்கெட் தொடருக்கான இங்கிலாந்து அணியில்கெவின் பீட்டர்சன் இடம் பிடித்துள்ளார். இந்த மகிழ்ச்சியில் லண்டனில் ஆஷஸ் கோப்பை வடிவ 'மாதிரியைக்' கையில் வைத்துக்கொண்டு உற்சாகப்பேட்டி அளித்தார்.*


# பீற்றர்சனின் தெரிவு சிறப்பானது

றொட் மார்ஷ்



ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணியில் கிரகம்தோப்பை தவிர்த்து கெவின் பீற்றர்சனை தெரிவு செய்தமை மிகச்சிறந்தது என அந்நாட்டு கிரிக்கெட் சபையின் முன்னாள் தேர்வாளர் றொட்மார்ஷ் கருத்துத் தெரிவித்துள்ளார். பீற்றர்சன் கடந்த வருடம் இந்தியாவுடன் நடைபெற்ற இங்கிலாந்து அக்கடமி அணியில் பங்கேற்று தன்னை கவர்ந்தார் என கூறியுள்ளார். மார்ஷ் இங்கிலாந்து கிரிக்கெட் அக்கடமியிலிருந்து விலகி அவுஸ்திரேலியாவில் அதே பணிப்பாளர் பணியை மேற்கொண்டு வருகின்றார்.

முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கெட்டிங் குறிப்பிடுகையில்; தற்போதைய அணியில் வோன் ஹார்மிசன், பிளின்டொப் ஆகியோர் நம்பிக்கைக்குரியவர்கள் எனத் தெரிவித்துள்ளார்.



# விளையாட்டு

# சிறிலங்கா - இந்திய கிரிக்கெட் தொடர் திட்டமிட்டபடி நடப்பதில் சிக்கல்


இலங்கை கிரிக்கெட் அணியின் இந்திய சுற்றுப் பயணம் திட்டமிட்டபடி நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இத்தொடரை இரண்டு பிரிவுகளாக நடத்த இந்திய கிரிக்கெட்சபை இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எட்டு ஆண்டுகளுக்குப் பின் இலங்கை அணி மூன்று டெஸ்ட் மற்றும் ஏழு ஒரு நாள் போட்டிகள் கொண்ட முழு அளவிலான தொடரில் பங்கேற்பதற்காக இந்தியா செல்கின்றது. இத்தொடர் வரும் ஒக்ரோபரில் தொடங்கவுள்ளது. இதே காலப்பகுதியில் சூப்பர் சீரிஸ் தொடர் அவுஸ்திரேலியாவில் நடக்கிறது.

உலக லெவன், அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இத் தொடரில் மூன்று ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டி ஒன்றும் நடக்கிறது. உலக லெவன் அணியில் இந்தியாவின் முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தவிர, நவம்பரில் (17-29 திகதிகளில்) தென்னாபிரிக்க அணி ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட இந்தியா செல்கிறது. இதன்படி , நவம்பரில் மட்டும் இந்திய அணி சொந்த மண்ணில் 12 ஒரு நாள் போட்டிகளில் விளையாட வேண்டியுள்ளது. இதனால் இலங்கை தொடரை இரண்டு பிரிவுகளாக நடத்த இந்திய கிரிக்கெட்சபை கோரிக்கை விடுத்துள்ளது. ஒக்ரோபரின் இறுதியில் ஒரு நாள் போட்டிகளையும் பின்னர் டிசம்பரில் டெஸ்ட் போட்டியையும் நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்தக்கோரிக்கை பரிசீலிக்கப்படும் என இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரி கூறியுள்ளார். முன்னதாக இந்திய அணி முத்தரப்பு ஒரு நாள் தொடரில் பங்கேற்பதற்காக வரும் 30 இல் இலங்கைக்கும், அடுத்த மாதம் சிம்பாப்வேக்கும் செல்கிறது.



## மேற்கிந்தியதீவு கிரிக்கெட் அணியின் பெறுமதிவாய்ந் பொருட்கள் திருட்டு

சிறிலங்காவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள மேற்கிந்திய கிரிக்கெட் அணியின் ஐந்து பேர்கள் அடங்கிய குழு ஒன்றின் பிரயாணப்பை கொழும்பு என்.என்.சி. மைதானத்திலிருந்து களவாடப்பட்டுள்ளது. இதில் 5.14,500 ரூபா பெறுமதியான பொருள்கள் இருந்ததாகவும் மேற்கிந்தியதீவு அணியின் தலைவர் கொழும்பு குருந்துவத்த பொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளார். இதில் மூன்று கையடக்க தொலைபேசிகள் ,வெளிநாட்டு நாணயங்கள்,கிரடிட் கார்ட் போன்றவை அப்பையில் இருந்ததென அறிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது குருந்துவத்த பொலிசார் கள்வர்களை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை. (32)

## ஆஷஸ் தொடரில் இணைக்கப்பட்ட பிரட்லீ தனது தகுதியை மீண்டும் நிரூபித்தார்

சுமார் ஒன்றரை வருடங்களாக டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்காது இருந்து தற்போது இங்கிலாந்துடனான ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்காக அவுஸ்திரேலிய அணியில் இணைக்கப்பட்டுள்ள பிரட்லீ தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார். அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற கவுண்டி போட்டியில் 53 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் ஆஷஸ் தொடருக்கு தன்னை தகுதிமிக்கவராக நிரூபித்துள்ளார்.

## கால்பந்து போட்டி


தமிழீழ விளையாட்டுத்துறை வடமராட்சிப் பிரிவு ஆதரவுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடாத்தும் விலகல் முறையிலான ஒன்பது பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டப் போட்டி வதிரி போமேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இந்த சுற்றுப்போட்டியில் இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் முத்தமிழ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் போட்டியில் [illegible]ணாசிலையடி, இளைஞர் விளையாட்[illegible]கத்தை எதிர்கொள்கின்றது கம்பர்மலை [illegible]ஸ் கழகம் விளையாடவுள்ளது.

## பங்களாதேசின் சிறிலங்கா சுற்றுலா போட்டி தொடர் அட்டவணை அறிவிப்பு

சிறிலங்காவுக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் அணியுடனான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான திகதியை சிறிலங்கா கிரிக்கெட்சபை அறிவித்துள்ளது.


25 நாட்கள் சுற்றுலா மேற்கொள்ளும் பங்களாதேஷ் செப்ரெம்பர் முதலாம் திகதி முதலாவது ஒருநாள் போட்டியில் பங்கேற்கும். அடுத்த போட்டி இரண்டும் மூன்றாம், ஐந்தாம் திகதிகளில் நடைபெறும் இம்மூன்று போட்டிகளும் தம்புள்ள ரங்கிரி மைதானத்தில் இடம்பெறும்.

அதனையடுத்து செப்ரெம்பர் 13 ஆம் திகதி முதல் 17 திகதி வரை முதலாவது டெஸ்ட் போட்டி கண்டியிலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி 21 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை கொழும்பிலும் நடைபெறும்.



*2008 ஒலிம்பிக் போட்டிகள் சீன தலைநகர் பீஜிங்கில் நடக்கவுள்ளன. இதில் குதிரையேற்ற போட்டியை மட்டும் ஹொங்கொங்கில் நடத்த சர்வதேச ஒலிம்பிக்சபை முடிவு செய்துள்ளது. இதற்காக நவீன வசதிகளுடன் கூடிய குதிரை யேற்ற மைதானங்கள் ஹொங்கொங்கில் உருவாகி வருகின்றன. அங்குள்ள மைதானம் ஒன்றில் ஒரு இளம் வீரர்பயிற்சி பெறுகிறார்.*

## கங்குலி,டெண்டுல்கர் மீண்டும் ஓட்டம் குவிப்பர்-சப்பல்



டெண்டுல்கர்-கங்குலி மீண்டும் ஓட்டம் குவிப்பார்கள் என்று பயிற்சியாளர் கிரேக் சப்பல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மூன்று நாட்களுக்கு முன்பு கங்குலி, டெண்டுல்கர் ஆகியோர் பெங்களூர் வந்தார்கள். கிரேக் சப்பலுடன் ஆலோசனை நடத்தினார்கள். அதன் பிறகு நேற்று முன்தினம் கிரேக் சப்பல் நிருபர்களிடம் கூறியதாவது;


'டெண்டுல்கர் இன்னும் இரண்டு மாதங்களில் சர்வதேச கிரிக்கெட்டுக்கு புதியபொலிவுடன் திரும்புவார் என்று எதிர்பார்க்கிறேன். கங்குலி என்னை சந்தித்தபோது அவருக்கு சில யோசனைகள் தெரிவித்தேன். எனவே அந்த இரு வீரர்களும் மீண்டும் ஓட்டங்களை குவிக்கும் சிறந்த வீரர்களாக செயற்படுவார்கள் என்று நம்புகிறேன்.

கங்குலிக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தும் வார்த்தைகளை சொன்னேன் திறமை உங்களை விட்டு அகலவில்லை என்று நம்பிக்கை ஊட்டினேன். எனவே கங்குலியும், டெண்டுல்கரும் மீண்டும் பழைய திறமைக்கு திரும்புவார்கள். நிறைய ஓட்டம் குவிப்பார்கள் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

கங்குலிக்கு ஆறு ஒரு நாள் போட்டிகளில் விளையாட தடை உள்ளது. இந்த விவகாரத்தில் அவருக்கு என்ன உதவி செய்ய முடியுமோ அதை செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம்.

தற்போது இந்திய வீரர்கள் திறமையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. ஆனால் உலக அணிகள் அத்தனையையும் வெல்லக்கூடிய பலமான அணியாக மாறிவிட்டது என்பதை என்னால் இப்போது சொல்ல முடியாது.அப்படி ஒரு தலைசிறந்த அணியாக மூன்று மாதத்தில் இந்திய அணி மாறுமா? ஆறு மாதத்தில் மாறுமா? 12 மாதத்தில் மாறுமா என்பதை என்னால் அறுதியிட்டு சொல்ல முடியாது. இதற்கு கால நிர்ணயம் எதுவும் கிடையாது. ஆனால் சந்தேகமில்லாமல் இந்திய அணியில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்றார் சப்பல்.

## சிந்தனைக்கு



சிங்களப் பேரினவாதத்தின் தீவிர வாதப்போக்கில் மாற்றம் ஏற்படும் என நான் என்றுமே நம்பியதில்லை; அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிடைக்கப் போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 17-07-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## அவர்களுக்குத் திருப்தி!

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பின் நான்கு முக்கிய பிரிவுகளுக்கு சிறிலங்கா உயர்நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்துள்ளது. இதனைச் சற்று ஆழமாக நோக்கினால் பொதுக்கட்டமைப்பிற்கு தடைவிதிக்காத நீதிமன்றம் அதன் செயற்பாட்டிற்குத் தடை விதித்துள்ளது எனக் கொள்ள முடியும்.

பொதுக்கட்டமைப்பின் நிதிமுகாமைத்துவம், பிராந்திய குழுவின் தலைமையகம் கிளிநொச்சியில் செயற்படுவது, மீளமைப்புத் திட்டங்களுக்கு பிராந்தியக்குழு ஒப்புதல் அளித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகிய நான்கு விடயங்களுக்கே நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

இவ் இடைக்காலத் தடையுத்தரவின்படி சிறிலங்கா நீதிமன்றம் மனிதாபிமானப் பிரச்சினைகள் எதனையும் கருத்திற்கொள்ளாது மிகவும் நுட்பமான முறையில் சிறிலங்கா ஆட்சியாளர்களும், பௌத்தபேரினவாத சக்திகளும் மகிழ்ச்சி அடையத்தக்க வகையில் தீர்ப்பொன்றை அளித்துள்ளதெனலாம்.

பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு தலைமை தாங்க முற்பட்டு நிற்பதும், பொதுக்கட்டமைப்பிற்கு இடைக்காலத்தடையுத் தரவு விதிக்க வேண்டும் என வழக்குத்தாக்கல் செய்ததுமான ஜே.வி.பி இத்தீர்ப்பின் மூலம் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளது. இத்தீர்ப்புக்குறித்து அதன் பிரச்சாரச் செயலர் விமல்வீரவன்ச, பொதுக்கட்டமைப்பு அதன் செயற்பாடுகள் அனைத்தும் இழந்த நிலையில் அதன் பற்கள் பிடுங்கப்பட்டு பெயரளவில் மாத்திரமே அது உள்ளதாகத் தெரிவித்தமை ஒன்றும் தவறான மதிப்பீட்டின் அடிப்படையிலானதல்ல.

இதேவேளை சிறிலங்கா சனாதிபதித் தரப்போ பொதுக்கட்டமைப்பிற்கு உயர்நீதிமன்றம் தடைவிதிக்காதது தமக்குக் கிடைத்த வெற்றியே எனவும் இதன் மூலம் பொதுக்கட்டமைப்பை உயர்நீதிமன்றம் அங்கீகரித்துள்ளதாகவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இந்த வகையில் இவ்விருதரப்பும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால் மகிழ்ச்சி அடைவதற்கு நியாயங்கள் உண்டு.ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவினதும், ஜே.வி.பி யினதும் அன்றிப் பேரினவாதத்தின் நோக்கத்தினை இத்தீர்ப்பு நிறைவு செய்துள்ளது.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தும், அவர் அரசாங்கத்தைப் பொறுத்தும் பொதுக்கட்டமைப்பு என்ற அமைப்பு ஒன்று தேவையே ஒழிய அது செயற்பட வேண்டும் என்பதல்ல.இத்தீர்ப்பின் பிரகாரம் பொதுக்கட்டமைப்பிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அது செயற்படப் போவதில்லை. ஆகையினால் பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்த வேண்டும் என்ற தேவையோ அது குறித்த முயற்சிகள் எதுவும் மேற்கொள்ள வேண்டிய தேவையோ சனாதிபதிக்கோ அவரது அரசாங்கத் திற்கோ இல்லை. பொதுக்கட்டமைப்புத் தேவையென அழுத்தம் கொடுத்த சர்வதேச நாடுகளும் இனி அழுத்தம் கொடுக்க வாய்ப்பில்லை.

ஜே.வி.பி ஜாதிகஹெல உறுமய உள்ளிட்ட பேரினவாத சக்திகளுக்கு சுனாமி அனர்த்தப்புனரமைப்பு என்ற பெயரில் வடக்கு கிழக்கில் குறிப்பாக தமிழ்மக்களுக்கெனப் புனர்வாழ்வு புனரமைப்புப்பணிகள் இடம்பெற்றுவிடுதல் கூடாது. அதற்கான நிதி தமிழருக்கு கிடைக்கப் பெற்று விடக்கூடாது என்பது அவர்களின் நிலைப்பாடாகும்.

அது மட்டுமன்றி அதிகாரங்கள் பகிர்ந்தளித்தல், தமிழ் மக்கள் நிர்வாகப்பணிகளில் பங்கேற்றல் போன்ற எந்த நடவடிக்கைகளுக்கும் அனுமதித்தல் கூடாது என்பதும் அவர்களின் தீர்மானமாகும். இந்நிலையில். தற்பொழுது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும் அதற்கு ஏற்ற வகையில் வந்துள்ளமை அவர்களைத் திருப்திப் படுத்தியுள்ளது.

அதாவது பிராந்தியக் குழுவின் தலைமையகம் கிளிநொச்சியில் செயற்படுவதற்கும், பிராந்தியக்குழு புனரமைப்பில் வகிக்கும் பங்கிற்கும் இத்தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் தமிழர் தாயகப் பகுதியில் தலைமையகம் ஒன்று அமைவதற்கும், தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்டஅமைப்பொன்றுசெயற்படுவதற்கும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புத் தடையாக வந்துள்ளது.

இந்த வகையில் ஒருபுறத்தில் பொதுக்கட்டமைப்பு முடக்கப் பட்டுள்ளதோடு, பொதுக்கட்டமைப்பில் தமிழர் தரப்பு வகிக்கக்கூடிய முக்கிய பகுதிகளுக்கும் உயர்நீதிமன்றத்தால் தடைவிதிக்கப் பட்டுள்ளது. சிறிலங்கா அரசியல் யாப்பின் பிரகாரம் இத் தடை விதிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் தமிழ்மக்களின் மனிதாபிமானத் தேவைகளைக்கூட சிறிலங்கா உயர்நீதிமன்றம் பார்க்கத் தவறிவிட்டது என்பது மட்டுமல்ல, இனப்பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வொன்றை எட்டுவதற்கு வாய்ப்பில்லை என்பதையும் நீதிமன்றத்தீர்ப்பு வெளிப்படுத்துவதாய் உள்ளது.

# அக்கரைப்பற்றில் மூன்று இளைஞர் படுகொலை; தமிழ்-முஸ்லிம் கலவரத்தை தூண்டும் சதி!

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் அக்கரைப் பற்றுப் பிரதேசத்தில் மூன்று இளைஞர்கள் படுகொலை செய்யப் பட்ட சம்பவத்துடன், பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுத் துறையினர் தொடர்புபட்டிருப்பதாக அப் பிரதேச மக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட சம்பவத்தின்போது உயிர்தப்பிய முஸ்லிம் இளைஞரொருவர் வெளியிட்டுள்ள தகவல் களையடுத்தே இந்தச் சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக குறிப்பிட்ட இளைஞர் வெளியிட்டுள்ள தகவல்கள் மூலம் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் முற்பகல் 11.00மணிக்கு அக்கரைப் பற்றிலிருந்து குறிப்பிட்ட முச்சக்கர வண்டியில் சாரதி உட்பட மூன்று முஸ்லிம்கள் அம்பாறைக்குச் சென்று உணவு விடுதியொன்றில் உணவருந்திக் கொண்டிருந்தசமயம் அந்த விடுதிக்கு வந்த பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த மூன்று பேர் அவர்களை விசாரித்தார்கள்.

சந்தேகம் ஏற்பட்டு அங்கு காணப்பட்ட ஏனைய அக்கரைப்பற்று வாசிகள் ஒருவரிடமும் இவர்களை விசாரித்துள்ளனர். அவர்கள் தெரியாது எனத் தெரிவித்துள்ளார்கள்.

பிற்பகல் 1.45 மணியளவில் விடுதியைவிட்டு இவர்கள் வெளியேறியபோது அங்கு காணப்பட்ட குறிப்பிட்ட குற்றப் புலனாய்வுத்துறையினர் அவர்களை அழைத்துத் தமது வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். பொலிசாரில் ஒருவர் முச்சக்கர வண்டியைச் செலுத்தினார்.

குறிப்பிட்ட வாகனம் அம்பாறை பொலிஸ் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் நிறுத்தப்பட்டபோது ஆயுதங்களுடன் மேலும் சிலர் அங்கு வந்துபோயுள்ளனர். பின்பு வாகனம் புறப்பட்டு மாலையில் அம்பாறை சுற்றுவட்டத்திற்கு அருகாமையில் நிறுத்தப்பட்டபோது அங்கு காணப் பட்டமற்றுமொரு வாகனத்திற்கு இவர்கள் மாற்றப்பட்டுள்ளார்கள், அந்த வாகனத்திற்குள் நான்கு தமிழ் இளைஞர்கள் இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளார்கள் (இவர்களில் ஒருவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்)

இவர்களை ஏற்றிய வாகனம் அக்கரைப்பற்று-அம்பாறை வீதி வழியாக ஆறாம் கட்டையடியில் நிறுத்தப்பட்டது. அந்நேரம் குறிப்பிட்ட இளைஞர் தனது கைகளை அவிழ்த்து வாகனத்தின் பின் பக்கமாக தப்பியுள்ளார்.

இவரது தகவலின்படி பொலிஸ் குற்றப்புலனாய்வுத்துறையினரே இதில் நேரடியாக தொடர்பு பட்டிருக்கின்றார்கள். தமிழ்-முஸ்லிம் மக்களிடையே கலவரத்தைத் தூண்டும் நோக்கத்துடன் இதனைச் செய்துள்ளார்கள் என அக்கரைப்பற்று பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் கருத்துக்கள் நிலவுகின்றன.

குறிப்பிட்ட சம்பவத்தில் இரண்டு முஸ்லிம் இளைஞர்களும், ஒரு தமிழ் இளைஞரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதோடு முச்சக்கரவண்டியும் தீ வைத்து எரிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# இந்த ஆண்டு சனாதிபதித்தேர்தல் நடத்தப்பட வேண்டும்; இல்லையேல் அரசியலமைப்பை அரசு மீறிவிட்டதாகும்

**— ஐ.தே.க பேச்சாளர் ஜி.எல் பீரிஸ்**

(கொழும்பு)

இந்த ஆண்டு அரச தலைவருக்கான தேர்தல் நடாத்தப்படாது விட்டால் சிறிலங்காவின் அரசியலமைப்பின் மூன்றாம் விதியை மீறியதாக அமைந்துவிடுமெனவும், அது மக்களின் இறைமையைத் தூக்கி எறியும் செயலாகிவிடுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கைக்குப் பதிலளித்து பீரிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

சந்திரிகா குமாரதுங்க தனது இரண்டாவது பதவிக்காலத்துக்கான உறுதியுரையினை 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதி செய்து கொண்டார். எனவே, சந்திரிகாவின் பதவிக்காலம் இந்த ஆண்டுடன் முடிவுக்கு வருகிறது.

இந்த ஆண்டு சனாதிபதித் தேர்தல் நடத்தப்படாவிட்டால் அரசியலமைப்பின் மூன்றாம் விதியை மீறியதாக அமைந்துவிடும். அதேவேளை அது சிறிலங்கா மக்களின் இறைமையைத் தூக்கி எறியும் செயலாகிவிடும்.

மகக்களின் நீதிபரிபாலன அதிகாரம் ஆகிய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியிருப்பதாகவும், மக்களின் சார்பில் பாராளுமன்றத்தாலும், சனாதிபதியாலும், நீதிமன்றங்களாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்றும் அந்த சட்டவாக்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# அரசியலமைப்பு மாற்றுப் பிரேரணை; பின்வரிசை உறுப்பினரால் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அரசியலமைப்பை மாற்றுவது தொடர்பான பிரேரணை ஒன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினரான விஜயதாச ராஜபக்ஷ இதனைப் பாராளுமன்றில் சமர்பித்துள்ளார்.

சனாதிபதிக்குள்ள அதிகாரங்களைக் குறைப்பது தொடர்பான விடயங்களும் இந்தப் பிரேரணையில் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப் படுகின்றது!

இது குறித்து கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் இலங்கையின் அரசியலமைப்பின் மிகப்பெரிய விடயம் ஒன்றில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து அரசாங்கத் தரப்பின் முக்கிய உறுப்பினர்கள் பிரேரணையை சமர்ப்பிக்காமல் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மூலம் இந்த விடயம் கையாளப்பட்டமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துவதாகக் கூறினார். (32)

## பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்: ஜயந்ததனபால வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இலங்கையின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த ஒப்பந்தமானது சமாதானத்தைக் கட்டியெழுப்ப அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

## மகப்பேற்றுக்கு சென்ற பெண் ஊழியர்களினால் தாக்கப்பட்டார்

வவுனியா வைத்தியசாலையில் மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் அங்கு கடமையாற்றும் ஊழியர்களினால் தாக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக பெண்ணின் உறவினர்கள் செய்து கொண்ட முறைப்பாட்டின் பெயரில் வவுனியா மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

குறிப்பிட்ட பெண்மணி வைத்தியசாலை ஊழியர்களினால் தாக்கப்பட்டுள்ளதை வைத்தியசாலை நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் அப் பெண்மணி வைத்தியருடன் பிரச்சினைப்பட்டு அவரின் கையில் இருந்த கருவியைப் பறிக்க முயன்றபோதே அவர் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.பொதுவாக மகப்பேற்றுக்கு செல்லும் பெண்கள் வைத்தியசாலைகளில் இத்தகைய தாக்குதல் சம்பவங்களுக்கு உள்ளாகுவதும் பின்னர் அதற்கு சாக்குப் போக்குக் கூறி பிரச்சினைகளை முடித்து விடுவதும் வைத்தியசாலைகளில் அதிகம் இடம்பெறும் நிகழ்வுகள் என்பதும்குறிப்பிடக் கூடியதாகும். (41)

## படைகளை உசார்நிலையில் வைக்கவும்; அரசாங்கத்திற்கு ஹெல உறுமய அறிவுரை

(கொழும்பு)

அரசாங்கம் முப்படைகளையும் உசார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

நேற்று ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் யுத்தம் ஒன்றை ஆரமப்பிக்கவுள்ளனர் என்றும், எனவே அதனை எதிர்கொள்ள அரசாங்கம் படையினரைத் தயார் நிலையில் வைத்திருப்பது அவசியம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (32)

# "பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்"

## நேற்று கிளிநொச்சியில்-அறிமுகவிழா



(கிளிநொச்சி)

"பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" கவிதைத் தொகுப்பின் அறிமுகவிழா நேற்று வெகு சிறப்பாக கிளிநொச்சியில் நடைபெற்றது. கவிஞர் புதுவை இரத்தின துரையின் படைப்புக்களில் ஒன்றான இந்நூலின் அறிமுகவிழா பிற்பகல் 3.45 மணியளவில் கிளிநொச்சி மத்தியகல்லூரி மண்டபத்தில் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் 12 ஆவது அறிமுக விழாவாக நடைபெற்றது.

எழுகலைஇலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையினரின் ஆதரவில் நடைபெற்ற இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழக் காவல்துறையின் துணைப் பொறுப்பாளர் மாதவன் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வேலணையூர் சுரேஸ் வரவேற்புரையினை நிகழ்த்த, யோகரட்ணம் யோகி நூலின் அறிமுகவுரையினை நிகழ்த்தினார். தொடர்ந்து தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நூலினை வெளியிட்டு வைக்க, இலக்கிய ஆர்வலர்கள் அவற்றைப் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து சத்தியமூர்த்தி நூலின் மதிப்பீட்டுரையினை நிகழ்த்த, நூலாசிரியரும், கவிஞருமான புதுவை இரத்தினதுரை ஏற்புரையினை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள், போராளிகள், படைப்பாளிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (ச)

# பொதுக்கட்டமைப்பு குறித்த தீர்ப்பை அரசாங்கம் ஏற்றுள்ளதாக அறிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைத் தாம் ஏற்றுக்கொள்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொதுக்கட்டமைப்பிலுள்ள சில விடயங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றம் இடைக்கால தடைஉத்தரவை விதித்தபோதும் முழுமையாகப் பொதுக்கட்டமைப்பை நிராகரிக்கவில்லை.

இது அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட பொதுக்கட்டமைப்பை உயர்நீதிமன்றம் அங்கீகரித்ததற்குச் சமனாகும்.

எனவே பொதுக்கட்டமைப்பை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல உறுதி பூண்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை அடிப்படை வாதிகளின் எந்த எதிர்ப்புக்கள் வந்தாலும் சமாதானத்தில் இருந்து பின்னிற்கப் போவதில்லை என சனாதிபதி தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் மாத்தளையில் கூட்டம் ஒன்றில் பங்கேற்ற அவர் தமது தந்தையாரான எஸ்.டபிள் யு ஆர்.டி பண்டார நாயக்கவின் சமாதான முயற்சிகளுக்கும் அடிப்படை வாதிகளே ஊறு விளைவித்தாகத் தெரிவித்தார். (32)

# கிளி, முல்லை மாவட்டங்களில் மீண்டும் தொலைபேசி துண்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தால் கிளி. முல்லை மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் நேற்று மாலை முதல் மீண்டும் இயங்கவில்லை.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் திடீரென செயலிழந்த தொலைபேசி இணைப்புக்கள் மறுநாள் நண்பகலின் பின்னர் மீண்டும் செயற்பட ஆரம்பித்தன. எனினும் முழுமையாக சீர்செய்யப்படாத நிலை தொடர்ந்தது. இந்த நிலையில் நேற்று மாலை 7.00 மணி முதல் தொலைபேசி இணைப்புக்கள் மீண்டும் முழுமையாகச் செயலிழந்துள்ளன. இவ்வாறு தொலைபேசி இணைப்புக்கள் சீரில்லாத நிலையில் உள்ளதால் பாவனையாளர்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

தொலைபேசி இயங்கவில்லை என்ற தகவலை கிளிநொச்சியில் உள்ள சிறிலங்கா தொலைபேசித் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்திற்கு தெரியப்படுத்துவதற்குச் சென்றால் அங்கு காவலாளி மாத்திரம் தான் கடமையில் இருக்கிறார். பரிவர்த்தனை நிலையத்திற்குரிய தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் எவரும் இல்லாத நிலை காணப்படுகின்றது. தொலைபேசி இணைப்புக்களில் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற கோளாறுகள் திட்டமிட்ட செயலாக இருக்கலாம். என பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (லோ.தீ)

# சிலாபத்தில் நேற்று துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி;சூடுநடத்தியவர் கைது

(கொழும்பு)

சிலாபத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தின்போது படுகாயமடைந்த நபரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது அவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

திருகோணமலையைச் சேர்ந்த ஆறுமுகம் குபேந்திரன் (வயது-28) என்பவரே சுட்டுக்கொலலப்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை தாக்குதலை நடத்தியவர் பேருந்து ஒன்றில் ஏறி தப்பிச் செல்ல முற்பட்டபோது பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரிடம் இருந்து ஒன்பது மில்லி மீற்றர் கைத்துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். (32)

# துப்பாக்கி வெடித்து சிப்பாய் காயம்

(கொழும்பு)

பயிற்சியின்போது தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார். கடந்த வியாழக்கிழமை கிளாலியில் இச்சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்த சிப்பாய் கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். சமன்குமார என்பவரே காயமடைந்தவராவார்.

# அரசியலமைப்பை மாற்ற வேண்டும்; மகாநாயக்கர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பை மாற்றியமைக்க வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாக அஸ்கிரிய மற்றும் மல்வத்த பௌத்த மகாநாயக்கர்கள் தெரி வித்துள்ளனர்.

அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ மகாநாயக்கர்களை நேற்று சந்தித்தார். இதன்போது பாராளுமன்றத்தில் தாம் கொண்டுவந்துள்ள அரசியலமைப்பைமாற்றியமைக்கும் பிரேரணையை அவர் மகாநாயக்கர்களிடம் சமர்ப்பித்தார்.

இதன்போது கருத்துரைத்த மகாநாயக்கர்கள் நாட்டில் புதிய அரசியலமைப்பின் தேவையொன்று உணரப்பட்டுள்ளது. அது உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் மூலமே நாட்டின் நிரந்தர பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை எட்ட முடியும் எனத் தெரிவித்தனர். இதற்குப்பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச அரசியலமைப்பில் மாற்றம் செய்ய வேண்டுமென நாட்டில் 90 வீதமான மக்கள் விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். (32)

# அரசாங்கத்தில் இணைவதைத் தவிர ஜே.வி.பி க்கு வேறுவழியில்லை

-அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

ஜே.வி.பியைச் பொறுத்தவரையில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை என அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார். நேற்று பதுளையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர் பொதுக்கட்டமைப்பில் அரசாங்கத்தில்இருந்து விலகிச் சென்ற ஜே.வி.பி தற்சமயம் அரசியலில் தனித்துப் போயுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஜே.வி.பி.அரசாங்கத்தில் இருந்தபோது பல நல்ல திட்டங்களை முன்னெடுத்தது. எனினும் அந்தக் கட்சி அரசாங்கத்தில் இருந்து விலகிச் சென்றது துரதிஸ்ட வசமானது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை உயர்நீதிமன்றம் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக வழங்கிய தீர்ப்பானது சனாதிபதியின் உறுதியான நிலைப்பாட்டிற்கு கிடைத்துள்ள அங்கீகாரம் என நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சனாதிபதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதை நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர் நீதிமன்ற தீர்ப்பானது எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படவுள்ள சமாதான முயற்சிகளுக்கு உதவியாக அமையும் என்றும் எதிர்காலத்தில் விடுதலைப்புலிகள் அமைப்புடன் எத்தகைய உடன்படிக்கையினையும் சனாதிபதி மேற்கொள்ள முடியும் என்று இந்தத் தீர்ப்பு தெரிவித்திருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (32)

# பங்களாதேஷ் கப்பலை தடுத்துவைக்க உத்தரவு

(கொழும்பு)

கொழும்புத்துறைமுக அதிகாரசபைக்கு உரிய கட்டணத்தைச் செலுத்தாமைக்காக பங்களாதேஷ் கப்பல் ஒன்றைத் தடுத்து வைக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எம்.சி.ஐ.மீன் என்ற கப்பலே இந்த உத்தரவுக்குட்பட்டுள்ளது. குறித்த கப்பல் கடந்த பல நாட்களாகக் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கின்ற போதும் தமக்கான கட்டணத்தை செலுத்த தவறியுள்ளதாக மனுதாரரான கொழும்பு துறைமுக அதிகாரசபை தமதுமனுவில் தெரிவித்துள்ளது. (32)

### தேசிய...

போராளிகள் விசேட அதிரடிப் படையினரின் சில நடவடிக்கைகளினால் எதிர்நோக்கும் கெடுபிடிகள் குறித்து விடுதலைப்புலிகள் தரப்பினரால் எடுத்துக் கூறப்பட்டது.

அதாவது விசேட அதிரடிப் படையினர் விடுதலைப் புலிகளின் அடையாள அட்டையை நிராகரித்து தேசிய அடையாள அட்டையைப் பெற வேண்டுமென கட்டாயப் படுத்துவது போர்நிறுத்த உடன்படிக்கை மீறல் என எடுத்துக் [illegible]னர்.

இதனை ஏற்றுக்கொண்ட மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் இது பற்றி சிறிலங்கா சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிற்கு உடனடியாக அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். இப்படியான செயலாளர்களை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதியொன்று விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது..

### சிறிலங்கா உயர்..

மேசைக்கு திரும்பக்கூடும் என்ற எதிர்பார்ப்பை மங்கச் செய்யும் வகையில் அமைந்துள்ள தீர்ப்புக் குறித்து சமாதான முயற்சிகளில் அக்கறை கொண்டுள்ள நோர்வேக்கு பக்கபலமாகவுள்ள உயர் ராஜதந்திரிகள் ஆச்சரியமடைந்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் கீழ் தம்மால் செயற்படமுடியாது என விடுதலைப்புலிகள் கூறிவரும் கருத்தை இத்தீர்ப்பு வலுப்படுத்துவதாக அமைந்துள்ளதாக மேற்குலகு இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

### கும்புறுப்பிட்டியில்...

பின்னர் மறுதினம் கடற்படையினரால் திருமலை மருத்துவமனையில் ஒருவரது சடலம் ஒப்படைக்கப்பட்டிருப்பதை அறிந்து அங்கு இறந்தவரின் சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டினர். மற்றையவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் ஒப்படைக்கப் பட்டிருந்தனர்.

இறந்தவர் மேசன்தொழில் செய்பவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### இன்றைய...

பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தென்பகுதியில் ஏற்பட்டுள்ள சர்ச்சை நிலை -உயர் நீதிமன்றம் தடை உத்தரவை பிறப்பித்துள்ள நிலை மற்றும் போராளிகள் பாதுகாப்பான பயண ஒழுங்குகளை மேற்கொள்வதில் அரசு காட்டிவரும் அசமந்தப் போக்கு மற்றும் கிழக்கில் இடம் பெற்று வரும் தொடர் வன்முறைகள் இவற்றால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. இந்தச் சூழலில் இடம் பெறும் இன்றைய சந்திப்பு முக்கியம் பெற்றதாக அமையும் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது. (லோ,தீ)

### பொதுக்கட்டமைப்புக்...

மக்களுக்கு சவாலாக அமையவில்லை.

நீதிமன்றத்தீர்ப்பு வேறு விதமாக அமைந்திருந்தால் பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கும். பொதுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்த முடியாத நிலைதான் உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் ஏற்பட்டுள்ளது.

இத் தீர்ப்பினால் பொதுக் கட்டமைப்பை அமுல் நடத்துவது தொடர்பாக நாம் வெளிச்சத்தைக் காணவில்லை. இருளைத் தான் காண்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (25)

### வந்தாறுமூலையில்...

கையிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றதாக ஏறாவூர் பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது